மாலைமணி

ஆசிரியர்: பி.எஸ்.இளங்கோ

விலை 16 காசு
11-9-1960

V.K. PICHAI
KARUR
NEWS AGENT

அறிஞர் பிறந்த தின
இதழ்

மாலைமணி
ஆசிரியர்: பி. எஸ். இளங்கோ
மணி 1 | 11—9—60 | ஒலி 45

பாசம் பிறந்த நாள்
நம் அண்ணா பிறந்த நாள்!

நமது பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு வருகிற 18-ம் தேதியோடு 51 வயது பூர்த்தியாகி 52 வயது பிறக்கிறது!

1909-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 18-ம் நாள் நமது அண்ணா அவர்கள் பிறந்தார்கள்! இந்த நாளையும் அண்ணா பிறந்த நாள் என்று சொல்லுவதைவிட அறிவு பிறந்த நாள், நமக்கு ஆற்றல் பிறந்த நாள், தமிழகத்திற்கு தன்மானம் பிறந்தநாள்-மேலாகப் பாசம் பிறந்த நாள் என்று கூறுவதே சாலப் பொருந்தும்!

அது மட்டுமல்ல—'பாசம் பிறந்த நாள், மனித குலத்திடையே நேசம் பிறந்த நாள், அன்பு பிறந்த நாள், அறநெறி பிறந்த நாள், தோழமைப் பற்று பிறந்த நாள் சகோதர வாஞ்சை பிறந்த நாள்" என்று சொல்ல வேண்டும்!

நமது அறிஞர் அவர்கள் பிறப்பதற்கு முன்பு அண்ணன் இருந்திருக்கிறார்கள், தம்பி இருந்திருக்கிறார்கள்! அவர்கள், அண்ணன், தம்பி என்று வாஞ்சையோடும் ஒருவருக்கொருவர் அழைத்துக் கொண்டும் இருந்திருக்கிறார்கள்! இவர்களுக்கு ஏற்பட்ட வாஞ்சை, ரத்தபாசம் ஒரு தாய் வயிற்றில் பிறந்த தோஷம்!

நான்கு சுவற்றுக்குள் அடங்கிக் கிடந்த இந்தக் குடும்பப் பாசம், இன்று நாடு முழுவதும் பரவிக் கிடக்கிறது!

நமது அறிஞர் அண்ணா அவர்களைப் பார்த்து—"என்ன செய்தீர்கள், என்ன செய்தீர்கள்? எதைச் சாதித்தீர்கள்? எதைச் சாதித்தீர்கள்?" என்று கேட்கும் கபோதிகளுக்கு இந்தச் சாதனையின் அருமை, பெருமை தெரியாது!

இந்த நாட்டிலே எத்தனையோ பேர்கள் சொந்த அண்ணனை அண்ணன் என்று கூப்பிடுவதில்லை! இந்த நாட்டிலே எத்தனையோ பேர்கள் சொந்த தம்பியை தம்பி என்று கூப்பிடுவதில்லை! ஆனால் காஞ்சிபுரத்தில் பிறந்த அறிவின் மேதையை, ஆயிரக் கணக்கான இளைஞர்கள், ஆயிரக் கணக்கான வாலிபர்கள், ஆயிரக் கணக்கான பெரியவர்கள், ஆயிரக்கணக்கான தாய்மார்கள் சொந்த அண்ணனைப்போல், தங்கள் குடும்பத்தில் பிறந்துவிட்ட சகோதரனைப்போல் பாசமும், பற்றும் கொண்டு "அண்ணா அண்ணா" என்று அழைக்கிறார்கள்! இந்தப் பாசம் வளரக் காரணம் என்ன? இலட்சோப இலட்ச மக்களுக்கு இந்த பாசம் எப்படி வளர்ந்தது?

எங்கோ திருவாரூரில் பிறந்த கருணாநிதிக்கும் அறிஞர் அண்ணாவுக்கும் என்ன சம்பந்தம்? என்ன உறவு? அவர்—"அண்ணா, அண்ணா" என்று அழைக்கிறார்! இவர் "என் தம்பி, என் தம்பி" என்று அழைக்கிறார்!

தஞ்சை மாவட்டத்திலே பிறந்த நெடுஞ்செழியனுக்கும் நமக்கும் என்ன உறவு, என்ன பாசம், என்ன சொந்தம், என்ன பந்தம்! அவர் அண்ணா என்று அழைக்கிறார், அண்ணாவோ அவரை "என் தம்பி, என் தம்பி" என்று அழைக்கிறார்! ஒரு கணம் யோசித்துப் பாருங்கள்! இந்த பாசமும், நேசமும் எப்படி வந்தது?

ஈரோட்டிலே பிறந்த சம்பத் அவர்கட்கும் நமக்கும் என்ன சொந்தம், என்ன பந்தம்! நம்மில் சிலர் அவரை அண்ணா என்று அழைக்கிறோம், நம்மில் சிலரை அவர் தம்பி என்று அழைக்கிறார்! நம்மில் சிலர் அவருக்கு அண்ணாவாகவும், நம்மில் பலர் அவருக்குத் தம்பியாகவும் இருக்கிறோம். அவர் நமது அண்ணா அவர்களை அண்ணா என்று அழைக்கிறார்—நமது அண்ணாவோ அவரை "என் தம்பி, என் தம்பி" என்று அழைக்கிறார்! இந்த உறவு எப்படிக் கிடைத்தது? எப்படி வளர்ந்தது!

கனியூரிலே பிறந்த மதியழகனுக்கும், திருச்சி, தஞ்சை, மதுரை, கோவை, ஆரூர், அண்ணாமலை நகர் இன்னும் எண்ணற்ற ஊர்களில்வாழும் இளைஞர்களுக்கும் ஆதியிலே என்ன உறவு, என்ன சம்பந்தம்! பெரியவர்களோ—'எங்கள் மதி, எங்கள் மதி" என்று பாசத்தோடு அழைக்கிறார்கள்! இளைஞர்களோ—எங்கள் அண்ணன், எங்கள் அண்ணன்" என்று அழைக்கிறார்கள்! உண்மையிலேயே நமக்கே புரியவில்லை! இந்த அற்புத நேச சக்தி, பாச உணர்ச்சி எப்படி வளர்ந்தது?

தமிழகத்து அரசியல் உலகிலேயே இப்படி ஒரு நேசத்தை, பாசத்தை வளர்த்த பெருமை, நமது பெருமைக்குரிய அண்ணா அவர்களை மட்டுமே சாரும்!

நமது பெருமைக்குரிய பேரறிஞர் அண்ணா அவர்களை நாம் மட்டும் அண்ணா என்று அழைக்கவில்லை, நமது இயக்கத்தோழர்கள் மட்டும் அண்ணா என்று அழைக்கவில்லை! மாற்றார்களும் அண்ணா என்று அழைக்கிறார்கள், மனமாச்சரியம் கொண்டவர்களும் அண்ணா என்று அழைக்கிறார்கள்!

காங்கிரஸ் நண்பர்களில் பலர், காங்கிரஸ் பெருந்தலைவர்களில் பலர் நேரிலே "அண்ணாத்துரை" என்று அழைக்கிறார்களே தவிர—மறைவாக "அண்ணா" என்றுதான் சொல்கிறார்கள்! எத்தனையோ காங்கிரஸ் தலைவர்கள் "அண்ணா ஊரில் இருக்கிறார்களா? என்று கேட்டிருப்பதை எங்கள் காதால கேட்டிருக்கிறோம்!

கம்யூனிஸ்டு நண்பர்களில் எத்தனையோ பேர் "அண்ணா" என்று பாசத்தோடு சொல்லி இருப்பதை பார்த்திருக்கிறோம்! நண்பர் ஜீவானந்தம் மேடையிலே வேண்டுமென்றே "அண்ணாத்துரை" என்று சொல்வார்! ஆனால் அவர் எத்தனையோ முறை "அண்ணாவும் கூட்டத்திற்கு வருகிறார்" என்று பேசி இருப்பதைக் கேட்டு இருக்கிறோம்!

இப்படி பலரிடத்திலும் பாசத்தை வளர்த்துள்ள நமது அறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களுக்கு இன்று 51 வயது பூர்த்தியாகிறது. இந்த பெருமைக்குரிய செய்தியைக் கேட்டு நாம் மட்டும் அல்ல மாற்றார்களும் பூரிக்கத்தான் செய்வார்கள்!

அறிஞர் அண்ணாவின் பணி தமிழகத்திற்குக் கிடைக்காமல் போயிருந்தால் தமிழகம் எப்படி இருக்கும் என்பதை நம்மைவிட மாற்றார்களே அதிகமாக உணர்ந்திருக்கிறார்கள்! எனவே அண்ணாவின் பிறந்ததின நாளை அவர்கள் நிச்சயமாகப் பொன்னாளாகக் கருதி மகிழ்வார்கள்! பூரிப்படைவார்கள்!

நாங்கள் சென்ற ஆண்டு கூறியதுபோல் அண்ணா அவர்களுக்கு 51 தங்க காசுகளை வழங்கி, பொன்னாடைப் போர்த்தி மகிழ்ந்திடும் நிலையில் நாமில்லை. அவரும் அதை அறவே விரும்பாதவர்!

அவருக்கேன் தங்கக்கேடயமும், வைர வாளும்! நாம் தான் அவருக்குத் தங்கம், அவர்தான் நமக்குத் தங்கம்! வைரம் பதித்த தங்க வாளும், கோமேதகம் இழைத்த கேடயமும் சாய்வு நாற்காலி அரசியல்வாதிகளுக்கே சொந்தமாக இருக்கட்டும்! அது நம அண்ணாவுக்கு வேண்டாம், வேண்டவே வேண்டாம்!

நாம் அவருக்கு அளிக்க வேண்டியது தங்கநிகர் திராவிடநாடு ஒன்றுதான்! இதை அவர் காலத்திலேயே நாம் பெற்று மகிழவேண்டும்! இதற்கான பணியில் முழுமூச்சுடன் பங்கு கொண்டு உழைக்க நாம், நம் தலைவர் பிறந்த நாளில் உறுதிகொள்ள வேண்டும்!

51 வயதைக் கடந்து, 52 வயதில் அடியெடுத்து வைக்கும் நமது அறிவரசர் அறிஞர் அண்ணா அவர்கள் பலலாண்டு வாழ்ந்து—எங்களுக்கு ஆற்றலைத் தந்து, வீரத்தைஊட்டி, எழுச்சியை அளித்து, விடுதலை தாகத்தை மேலும், மேலும் உண்டாக்கி திராவிடத்தை மீட்டுத் தாருங்கள் என்று பணிவன்போடு வேண்டிக் கேட்டுக் கொள்ளுகிறோம்!

அறிவே நீ வாழ்க!
அறிஞரே நீர் வாழ்க!
அன்பே நீ வாழ்க!

எங்கள் அண்ணலே நீர் வாழ்க, நீடூழிவாழ்க! என்று அண்ணா அவர்களை வாழ்த்தி வணங்குகிறோம்! ★

இந்தியை எந்த காலத்திலும் நுழைய விடமாட்டோம்! அதை விரட்டி அடித்தே ஓய்வோம்!

படையால், பட்டாளத்தால், சுழலும் துப்பாக்கியால் எங்களைத்தான் அடக்க முடியும்!

எங்கள் உணர்ச்சியை, கொந்தளிக்கும் உள்ளத்தை உன்னால் என்ன செய்ய முடியும்?

வெள்ளைக்காரனிடம் உதைபட்ட காங்கிரஸ் வீரர்கள் இதை உணர்வார்களா?

சென்னையில் நாவலர் நெடுஞ்செழியன் முழக்கம்!

அவைத் தலைவர் அவர்களே! அன்பு செழுமிய தோழர்களே! பெருமைக்குரிய தாய்மார்களே!

இந்தி எதிர்ப்புக் கண்டன தினத்தை நாம், கூவம் நதிக்கரையிலே கூட்டியிருக்கிறோம். இங்கு கூட்டப்பட்டிருக்கும் கூட்டத்தின் நோக்கத்தை அறிந்து, உணர்ந்து, தெளிந்து மிக்க ஆர்வத்தோடு இருக்கும் உங்களைக் காண, உள்ளபடியே பெருமகிழ்ச்சியடைகிறேன்!

ஆங்காங்கே ஓடிக் கொண்டிருக்கும் சிற்றாறு, பேராறாக மாறி, அந்தப் பேராறு பெருங்கடலில் கலப்பது போல்—பகுதி வட்டங்களிலிருந்து புறப்பட்ட கண்டன ஊர்வலங்கள், தொகுதி முழுவதும் சுற்றி, சிறுக சிறுக இந்த மக்கள் பெருங்கடலில் வந்து கலந்திருக்கின்றன! பகுதி, வட்டங்களில் ஊர்வலம் நடத்திய செயல் வீரர்களையும், அதிலே கலந்து சிறப்பித்த அருமைத் தோழர்களையும் "வாழ்க, வாழ்க" என்று வாழ்த்தக் கடமைப் பட்டிருக்கிறேன்!

எனக்கு முன் பேசிய நண்பர்களெல்லாம் இந்தியைப் பற்றி மிகத் தெளிவாகவும், "நாம் ஏன் இந்தியை எதிர்க்கிறோம்" என்பதைப்பற்றி மிக விரிவாக எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள்! நாம் இதுவரை நடத்திவந்த இந்தி எதிர்ப்புப் போராட்டங்களைப் பற்றியும் உங்களுக்குத் தெள்ளத் தெளிய எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள்!

இந்தி இங்கு வருவதற்கு அவசியமும் இல்லை, நேர்மையுமில்லை, நீதியுமில்லை! தகுதியுமில்லை, திறமையுமில்லை! அதற்கு எந்த ஆற்றலுமில்லை! ஆனால் அதிகாரம் உண்டு, ஆணவம் உண்டு! சூழ்ச்சி உண்டு, சூது உண்டு, வாது உண்டு, வஞ்சகம் உண்டு! இந்த நாட்டின் பண்பாட்டை அழிக்கும் சக்தி உண்டு, இந்த நாட்டின் நாகரீகத்தை அழிக்கும் ஆற்றலுண்டு! எனவேதான்—நம்மை வடவர்களுக்குஎன்றென்றும் அடிமைப் படுத்தி வைக்கும்



வஞ்சக எண்ணத்தோடுதான் இந்தியைத் திணிக்கின்றனர்! இதில் தெளிவு பெற்றவர்கள் நம்மோடு வந்திருக்கிறார்கள்—தெளிவு பெறாதவர்கள்தான் நம்மை எதிர்க்கின்றார்கள்! இதில் தெளிவு பெறாமலிருப்பவர்களில் சிலர்தான் அமைச்சர்களாகவும் இருக்கிறார்கள்! தெளிவு பெறாத ஆட்சியாளர்கள் கட்டாயம் தெளிவு பெறுவார்கள் என்றும் நம்புகிறோம்!

யார் யாரோ தெளிவு பெற்றிருக்கிறார்கள், எவர் எவரோ தெளிவடைந்திருக்கிறார்கள்—பெரிய பெரிய ஆட்களெல்லாம் தெளிவு பெற்றிருக்கிறார்கள்—"இந்தியைத் திணித்தே தீருவேன்" என்று சொன்ன ஆச்சாரியாரே தெளிவு பெற்றிருக்கிறார்! இவர்கள் மட்டும் தெளிவு பெற மாட்டார்களா?

1938ம் ஆண்டில் நாம் இந்தியை எதிர்த்த நேரத்தில், நம்மை அலட்சியம் செய்தவர்கள், பலர்! தெளிவு பெறாமலேயே நம்மை எதிர்த்தவர்கள் பலர்! பலர்! மறைமலை அடிகளும், சோமசுந்தர பாரதியாரும் அந்த இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலே பங்கு கொண்டார்கள்! கருத்துக்களை பறிமாறிக்கொள்ள கொள்ள தெளிவு பெற ஆரம்பித்தார்கள்!

1938ம் ஆண்டில் மாணவர்கள் உணரவில்லை! மாணவர்கள் உணர மறுத்தார்கள்!

1938ம் ஆண்டில் ஆச்சாரியார் உணரவில்லை;—உணரமறுத்தார்! இந்தியை திணிக்கத்தான் செய்வேன், இந்தி படித்தால்தான் இங்கிரிமென்ட் உண்டு, இந்தி படித்

(அடுத்த பக்கம் பார்க்க)

1921ல் நடைபெற்ற சட்டமறுப்பு வெற்றிபெற்றது, உப்பு சத்தியாக்கிரகம் வெற்றி பெற்றது, கொடி போராட்டம் வெற்றி பெற்றது 1947ல் தான்!

அதேபோல் கல்லக்குடி போராட்டமும், இந்தி எதிர்ப்புப் போராட்டமும், இனி நடத்த இருக்கின்ற போராட்டங்களும் ஒருநாள் வெற்றி பெற்றே தீரும்!

தால்தான் உத்தியோக உயர்வு கிடைக்கும் என்றும் கூறினார்! அவரே இப்போது உணர்ந்திருக்கிறார்! 1938ம் ஆண்டில் உணராத ஆச்சாரியார் 1960ல் உணர்ந்திருக்கிறார்!

1938ம் ஆண்டில் சர் சி. பி. ராமசாமி ஐயர் உணரவில்லை, சர் சி. வி. ராமன் உணரவில்லை! அந்த ராமனும் இப்போது உணர்ந்து கொண்டிருக்கிறார்! 1938ம் ஆண்டைவிட 1948ல் உணர்ந்தவர்கள் அதிகம்! 1948ஐ விட 1960ல் உணர்ந்தவர்கள் மிக மிக அதிகம்!

நம்மைப் பற்றி, நம்முடைய நிகழ்ச்சிகளைப்பற்றி கொஞ்சமும் கவலைப் படாமல் அலட்சியப் படுத்தியவர்களெல்லாம் இப்போது நம்மைப் பற்றிதான் பேசுகிறார்கள்! நம்மைப் பற்றிதான் சதா சிந்திக்கிறார்கள்! நம்மைப் பற்றிதான் கவலைப்படுகிறார்கள்

அமைச்சர்கள் நம்மைப் பற்றி என்ன பேசுகிறார்கள்—அஞ்சி, அடங்கி, ஒடுங்கி உட்கார்ந்து விட்டோம் என்று கருதுகிறார்கள் போலும்!

1948 முதல் 1957 வரை அலட்சியம் செய்து வந்தவர்கள் அனைவரும் நம்மைப் பற்றியே கூர்ந்து கவனிக்க ஆரம்பிக்கிறார்கள்! இன்று நம்மை மட்டும் அலட்சியப் படுத்தி விட்டு அவர்கள் வாழவே முடியாது என்ற நிலை பிறந்திருக்கிறது.

ஐநூற்றுச் சில்லறைஉறுப்பினர்களைக் கொண்ட பாராளுமன்றத்தில் இரண்டே இரண்டு உறுப்பினர்கள் தான் முன்னேற்றக கழகத்தைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள்! 2 பேர்கள் தானே, இவர்களால் என்ன முடியும் என்று அலட்சியம் செய்ய முடியுமா? அலட்சியம் செய்ய முடியும்! முடியாது என்று சொல்லவில்லை! 310 கோடி ரூபாய் செலவில் கட்டிக் காக்கப் பட்டு வரும் இராணுவம் இருக்கிறது! இந்த இராணுவத்தால் நம்மை அடக்கிவிடலாம் ஒடுக்கிவிடலாம் என்று அவர்கள் எண்ணக்கூடும்!

பத்து கோடி ரூபாய் செலவில் சிறைச்சாலையிருக்கிறது, இராணுவம் இருக்கிறது, போலீஸ் இருக்கிறது! நம்மை அடக்க அவர்களால் முடியாது என்று கூறவில்லை!

இந்த சிறை வழிந்தால், பக்கத்திலே இருக்கிற ஆந்திரத்திற்கு அனுப்பலாம், அங்கேயும் வழிந்தால் ஏர்வாடா சிறைக்கு அனுப்பலாம்! அதுவும் நிரம்பி வழிந்தால் அந்தமானுக்கும் அனுப்பலாம்! அந்தமான் சிறைக்கு அனுப்ப உங்களிடம் கப்பல் வசதி இருக்கிறது. படை வசதி இருக்கிறது! நம்மை இவர்களால் அடக்கமுடியும், ஒடுக்கமுடியும்! ஆனால் அலட்சியப்படுத்திவிட்டு மட்டும் ஒருநாளும்வாழமுடியாது.

1960ம் ஆண்டில் நம்மை அலட்சியப்படுத்த இந்திய சர்க்காருமில்லை, மாநில சர்க்காருமில்லை!

நமது முதலமைச்சர் காமராஜர் தஞ்சை மாவட்டத்திலே கூறினாராம்—"என்னிடம் இரட்டைக் குழல் துப்பாக்கி இருக்கிறது, இவர்களால் என்ன செய்ய முடியும் என்று! என்னிடம் குண்டுகள் போட்ட துப்பாக்கிகள் இருக்கின்றன என்று நம்மை மிரட்டினாராம்! துப்பாக்கிகள் இருக்கின்றன! அந்தத் துப்பாக்கிகளால் எங்களை அடக்கமுடியும்! ஆனால் அலட்சியம் செய்ய முடியாது!

நாம் கறுப்புக் கொடி நிகழ்ச்சியை கைவிட்டதற்காக கேலி பேசுகிறார்களாம்; கிண்டல் செய்கிறார்களாம்! நம்முடைய நோக்கம் கறுப்புக் கொடி காட்டுவதல்ல! கறுப்புக் கொடி தான் காட்ட வேண்டும் என்று நாம் நினைக்கவுமில்லை! அந்த அளவு மன அரிப்பு கொண்டவர்களல்ல!

நம்முடைய வாதங்களை எடுத்துச் சொன்னோம்! நம்முடைய நிலையை எடுத்துச்சொன்னோம்! நம்முடைய விளக்கங்களையும் நாட்டு மக்கள் முன்பு எடுத்து வைத்தோம்! இந்தி கூடவே கூடாது என்று தெளிவாகவும், திட்டவட்டமாகவும் கூறினோம்!

இந்தி வந்துதான் ஆகும் என்று அவர்கள் கூறினார்கள்! 1965-க்குப் பிறகு தேவநாகரி எழுத்தில் இந்திதான் ஆளும் என்று அரசியல் சட்டத்தில் இருக்கிறது! அது தேவையில்லை என்றோம்! இந்தி கூடாது என்று சொன்னோம்! அவர்களோ இறுமாந்து கிடந்தார்கள்! நாம் கிளர்ச்சியில் ஈடுபட்டோம்! நம்முடைய கிளர்ச்சி அவர்களை இறங்க வைத்ததா, இல்லையா? நம்முடைய கிளர்ச்சி அவர்களை இறங்க வைத்தது!

வங்கத்தின் எதிர்ப்பு, பஞ்சாப் மக்களின் எதிர்ப்பு, தென்னகத்தின் எதிர்ப்பு அவர்களை இறங்க வைக்கத்தான் செய்தது! 1965-க்குப் பிறகும் ஆங்கிலம் நீடிக்கும்! நீண்ட காலத்திற்கு நீடிக்கும்! இந்த பேசாத மக்கள் விரும்புகிற வரையில் நீடிக்கும்! இந்த வகையிலே சட்டமும் செய்யப் படும் என்று கூறுமளவுக்கு இறங்கி வந்திருக்கிறார்கள்!

நமது அறிஞர் அண்ணா அவர்கள்—"வாக்குறுதி காப்பாற்றப்படவேண்டும், அதற்காக வாக்குறுதி தர வேண்டும்" என்று கூறினார்கள்! வாக்குறுதி தந்தால் எங்கள் மேயர் குடியரசுத் தலைவரை வரவேற்பார், இல்லாவிட்டால் கறுப்புக் கொடி காட்டுவார்" என்று கூறியவுடன் இவர்கள் பணிந்தார்களா. இல்லையா?

அறிஞர் அண்ணா அவர்கள் சென்னை கடற்கரை கூட்டத்தில் கூறியதுபோல் — ஐசன்ஹோவருக்கு மட்டுமே கடிதமெழுதி வந்த பண்டித நேரு, அடினார், குருஷ்சேவ் போன்றவர்களுக்கு மட்டுமே கடிதமெழுதி வந்த பண்டித நேரு சம்பத்திற்கும் எழுதினார்!

அரசியல் நாகரீகத்தை கடைபிடிப்பதற்காக தந்த உறுதி மொழியை நம்பி கறுப்புக் கொடியை கை விட்டோம்! இதில் என்ன வெற்றி என்று கேட்கிறார்களாம்!

நாங்களென்ன இந்தியே ஒழிந்து விட்டது என்று சொல்கிறோம்? நாங்களென்ன, "இந்தியை ஒழித்துக் கட்டுவதற்காகவே கறுப்புக் கொடி பிடிக்கிறோம்" என்று சொன்னோம்?

நாங்கள் கேட்டது கிடைத்தது! அதே அளவுக்கு மட்டுமே வெற்றி! கேட்ட அளவிற்கு வெற்றி!

நாங்களென்ன திராவிடநாடு கொடு என்று கேட்டோம்? கொடுக்காவிட்டால் கறுப்புக் கொடி பிடிப்போம் என்று சொன்னோம்? திராவிடநாடு கிடைக்கவில்லையே இது எப்படி வெற்றியாகும் என்று கேட்க! உறுதிமொழி கேட்டோம் — கிடைத்தது: அந்த அளவுக்கு வெற்றி என்று சொல்கிறோம்.

நாங்கள் இந்தி மொழியையே விரட்டி விட்டதாகச் சொல்லவில்லையே! இப்போது நமக்குப் பிடி கிடைத்திருக்கிறது!

பிடி கிடைத்தால் போதும்! பிறகு எப்படி வேண்டுமானாலும் குத்துக்களை விடலாம்! மூக்கைப் பார்த்து குத்து விடலாம், மூஞ்சியைப் பார்த்து குத்து விடலாம்! நமக்குப் பிடிதான் முதலில் கிடைக்க வேண்டும்! அந்தப் பிடி நமக்குக் கிடைத்து விட்டது!

நமக்குக் கிடைத்த உறுதி மொழியை வைத்துக் கொண்டு — இவர்களுடைய யோக்கியதையை, நாணயத்தை எடுத்துச் சொல்லலாம்! இவர்கள் தந்த உறுதிமொழியை காப்பாற்றாவிட்டால், அந்த உறுதி மொழியை வைத்துக்கொண்டு, நாம் நாட்டு மக்களுக்குச் சொல்லலாம்!

அயல் நாடுகளிலிருந்து வரும் பெரிய மனிதர்களிடமும் இந்தப் பிடியை வைத்துக்கொண்டு இவர்களுடைய நாணயத்தை எடுத்து விளக்கலாம்! "பண்டித நேருவை பெரிய மனிதர் என்று எண்ணினீர்களே, பண்டித நேருவை நேர்மையானவர் என்று நினைத்தீர்களே—இதோ பாருங்கள் கொடுத்த வாக்குறுதியை காற்றில் பறக்கவிட்டிருக்கிறார்" என்று இவர்களுடைய அரசியல் யோக்கியதையை புரியும்படி எடுத்துச் சொல்லலாம்!

வாக்குறுதி பாட்டுக்கு வாக்குறுதி இருக்கட்டும், இந்தி பாட்டுக்கு இந்தி வரட்டும் என்று இந்தியை திணித்தால் — கிடைத்த பிடியை வைத்துக் கொண்டு நாம் கேட்கலாம்! போராடலாம்!

சில பேர்கள் திருடர்களைப் பிடித்துக் கொடுத்துவிட்டால்,

(9ம் பக்கம் பார்க்க)

போராட்டம் நிறுத்தப்படவில்லை! கறுப்புக்கொடிதான் நிறுத்தப்பட்டது!

கிண்டல் செய்தால், கேலி பேசினுல், எங்கள் ஆற்றலைப் பழித்தால், உறுதிமொழி மீறப்பட்டால் டெல்லி நோக்கியும் எங்கள் படைபுறப்படும்!

குருதி கொட்டி உறுதி தந்தவர்கள்மீது ஆணையிட்டுக் கூறுகிறோம்!

வெற்றி அல்லது வீர மரணம்! ஆட்சியாளர்களே உணருங்கள்!

இந்தியை எதிர்த்து சென்னையில்

கருணாநிதி முழக்கம்

திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் ஆக. 31 ம் தேதியிலிருந்து செப்டம்பர் 6 வரை நாடெங்கும் இந்தி எதிர்ப்புக் கண்டனத்தை ஊர்வலத்திலும், பொதுக் கூட்டத்திலும் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டதற்கிணங்க சென்னை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆதரவில் 4-9-60 ஞாயிறு அன்று இந்தி எதிர்ப்பு கண்டன நாள் கொண்டாடப்பட்டது.

சென்னை மாவட்டத்தின் செயலாளராக புதிதாகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கும் தி. மணிவண்ணன் அவர்கள் வேண்டுகோள் விடுத்திருந்த படி 4 ம் தேதி அன்றுசென்னை நகரெங்கும் சிறப்பான முறையில் கண்டனம் தெரிவிக்கப்பட்டது. அன்று காலையிலிருந்து மாலை வரை ஒவ்வொரு வட்டத்திலும் இந்தி எதிர்ப்பு ஊர்வலங்கள் நடை பெற்ற வண்ணம் இருந்தன. மாலை ஒவ்வொரு தொகுதிகளிலிருந்தும் இந்தி எதிர்ப்பு கோஷங்களை முழக்கிக் கொண்டு கூட்டம் நடை பெறுகின்ற நேப்பியர் பூங்காவுக்கு ஏராளமான கூட்டம் வந்து சேர்ந்தது.

பல பகுதி களிலிருந்து. ஊர்வலங்களில் இந்தி எதிர்ப்பு சம்பந்தமான வேடங்களைத் தரித்துக்கொண்டு மக்கள் மனதில் உணர்ச்சிகளை தூண்டும் வகையில் வந்த காட்சி கண் கொள்ளா காட்சியாக இருந்தது. உதாரணமாக ஆயிரம் விளக்கு தொகுதியிலிருந்து வந்த ஊர்வலத்தில் இந்தி அரக்கி என்ற பெயரால் ஒரு தோழர் கோர உருவத்துடன் காட்சியளித்தார். அந்த அரக்கியை துரத்தி அடிப்பது போன்று ஒரு தோழர் கையில் சவுக்கை ஏந்தி அடித்துக் கொண்டே வந்தார். அரக்கி பயந்து ஓடி கொண்டிருப்பதும் ஒருவர் விரட்டி அடிப்பதுமான இந்த காட்சி சென்னை மக்களிடையே ஒரு வித வீர உணர்ச்சியையும் பரபரப்பையும் உண்டாக்கியது.



நேப்பியர் பூங்காவில் என்றுமே கண்டிராத வகையில் மக்கள் வெள்ளம் திரண்டிருந்தது. கூட்டம் ஆரம்பிப்பதற்கு முன் தோழர் சேலம்சீனுவாசன் சில இயக்கப் பாடல்களை மக்கள் மனதில் உணர்ச்சி யூட்டும் வகையில் பாடினார்.

சென்னை நகராண்மைக் கழக உறுப்பினரும், சென்னையில் நம் கழகத்தின் முக்கிய பிரமுகருமான தோழர் முருகேசனார் அவர்கள் கூட்டத்திற்கு திரு. தி· மணிவண்ணன் அவர்களை தலைமை வகிக்க கேட்டுக்கொண்டார். சென்னைக் நகராண்மைக் கழக உறுப்பினர் ஜி. சுப்பிரமணியம் அவர்கள் அதை ஆதரித்தார்.

பின் நீண்ட கையொலிகட்கிடையே கூட்டத்தின் நோக்கத்தைப்பற்றி விளக்கிப் பேசினார் திரு. தி. மணிவண்ணன்.

இயக்கத்திற்காக அரும்பாடுபட்டு உழைத்த பெத்தாம்பாளையம் பழனிச்சாமி அவர்களின் மறைவு குறித்தும், கோவை ஆரோக்கியசாமி, குடந்தை ராமலிங்கம் ஆகிய இரு கொள்கைவீரர்கள் மரணமடைந்தது குறித்தும், அனுதாபத் தீர்மானம் நிறைவேறறப்பட்டது.

பின்னர் காஞ்சி மணிமொழியார் எஸ் வி. வேலு. ஆறுமுகம் இரா சம்பந்தம், சைதை சம்பந்தம், அ. செல்வராசன் பார்த்தசாரதி, திருமதி அலமேலு அப்பாத்துரை, அருப்புக் கோட்டை புலவர் எம் எஸ். இராமசாமி, பெரம்பூர் மதுரை.

(6ம் பக்கம் பார்க்க)

நாடெங்கும் நமது பிணங்கள் விழுகின்றன !

காங்கிரஸ் ரௌடிகளின் மிருகத்தனம் எல்லையை மீறுகிறது !

ஆட்சியாளர்களுக்கு எச்சரிக்கை விடுக்கிறோம்-இந்தப் பிணங்கள் விழத்தான வேண்டுமா ?

நாவலரே நீங்களாவது சொல்லுங்கள்-இந்தப் பிணங்கள் விழத்தான் வேண்டுமா ?

கருணாநிதி பேச்சு

(5ம் பக்கத் தொடர்ச்சி)

பெரம்பூர் மாசிலாமணி, ஏ. வி. பி. ஆசைத்தம்பி துணைப்பொதுச் செயலாளர் என். வி. நடராசன் ஆகியோர் இந்தி எதிர்ப்புப் பற்றி மிக விளக்கமாகவும் விரிவாகவும் பேசினார்கள்.

அடுத்து கலைஞர் கருணாநிதி நீண்ட கையொலிகட்கிடையே பேசியது வருமாறு:

அன்புள்ள தலைவர் அவர்களே, நன்மதிப்பிற்குரிய பொதுச் செயலாளர் நாவலர் அவர்களே! அருமை நண்பர்களே! தாய்மார்களே! இன்றைய தினம் நம்முடைய கழகப் பொதுச் செயலாளர் நாவலர் அவர்களின் வேண்டுகோள்படி இந்தி எதிர்ப்பு நாளை இங்கே கொண்டாடுகிறோம். சென்னை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகம் இந்த விழாவை மிகச் சிறப்புடனும், சீருடனும் நடத்துகிறது. இன்றைய தினம் இந்த மாநகரே ஒரு பெரும் உணர்ச்சிப் பேருவகையில் திளைத்துக் காணப்படுகிறது.

இந்த மாநகரில் உள்ள ஒவ்வொரு கிளைகளும் ஒன்று சேர்ந்து எக்காளமிட்டு தங்களுடைய எதிர்ப்பு உணர்ச்சியைக் காட்டுவதற்காக இன்று ஊர்வலங்களை மிகச் சிறப்பான வகையில் நடத்தி உள்ளது.

நம்முடைய பொதுச் செயலாளர் நாவலர் அவர்களின் வேண்டுகோளின்படி கூட்டப்பட்டுள்ள இந்த மாபெரும் கூட்டத்தில் என்னையும் கலந்து கொள்ளச் செய்து பேச வாய்ப்பளித்தமைக்கு முதற்கண் எனது வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய தினம் இந்த மாநிலத்தில் உள்ள பகுதியிலும் பேரூரிலும்-சிற்றூரிலும், குக்கிராமங்களிலும் இந்தி எதிர்ப்பு நாள் வெகு விமரிசையாகக் கொண்டாடப்படும். இந்தியை எதிர்ப்பதற்காக நாட்டிலுள்ள மக்களெல்லாம் இன்று உத்வேகத்துடனும், வீர உணர்ச்சியுடனும் தங்களது எதிர்ப்பைத் தெரிவிப்பார்கள்.

இன்று இந்த மாநகரில் ஒவ்வொரு பகுதியிலும் ஊர்வலங்கள் நடைபெற்றன. அந்த ஊர்வலங்களில் மக்கள் காட்டிய பேராதரவையும், உணர்ச்சிகளைக் கண்டும் நானே வியப்படைந்தேன்.

இந்த ஊர்வலத்தில் நான் கண்ட ஒரு காட்சியையும் உங்களிடம் கூறாமல் இருக்க முடியவில்லை. நான் வாக்காளனாக உள்ள ஆயிரம் விளக்குத் தொகுதியிலிருந்து வந்த ஊர்வலத்தில் (இந்த சமயத்தில் அருகில் அமர்ந்திருந்த ஆசைத்தம்பி நான் சட்ட மன்ற உறுப்பினராக இருக்கும் ஆயிரம் விளக்கு என்றார்.) நான் வாக்காளனாக இருக்கும் ஆயிரம் விளக்கு என்றேன். அதற்கு சட்டமன்ற உறுப்பினராக இருப்பவர் தோழர் ஆசைத்தம்பிதான். இரண்டு தோழர்கள் வேடம் அணிந்திருந்தார்கள். அவர்கள் வீதிகளில் நடித்துவந்த நடிப்பைப் பார்த்து என் கண்குளிர ரசித்து வந்தேன். "இந்தி அரக்கி ஒருவள் கோர ரூபத்துடன் வருகிறாள்; தமிழ் வீரம் கொண்ட வாலிபன் ஒருவன் ஓடு ஓடு என்று அடித்து விரட்டுகிறான். அந்த அரக்கி சவுக்கடியைத் தாங்க முடியாது ஓடுகிறாள். இந்தக் காட்சியை ஆயிரம் விளக்குத் தோழர்கள் வெகு அருமையாக சித்தரித்திருந்தார்கள்.

ஆயிரம் விளக்குத் தொகுதி கலைஞர்கள் வாழும் தொகுதி. புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன், இலட்சிய நடிகர் எஸ். எஸ். ராஜேந்திரன், கவிஞர் கண்ணதாசன், நண்பர் ஆசைத்தம்பியும், நானும் இங்கே வாழ்கின்றோம். அதனால் அங்குள்ளவர்களுக்கு கலை வாடை வீசி இம்மாதிரியான கற்பனையைச் சித்தரித்திருக்கின்றனர்.

அரக்கியாக வேடமிட்ட தோழரின் பரிதாப நிலையை—அவர் அடைந்த இன்னலை கண்டு நான் பரிதாபப்பட்டேன். பரிதாபப் பட்டேன் என்றால் அந்த வேடமணிந்த தோழர் அந்த வீர வாலிபனிடம் அடிபடும் போது தெருக்களில் ஓடுவதைக் கண்டு வருந்தியதன் காரணமேயாகும். நம்முடைய தோழர்கள் இதை அரிய கலை உணர்ச்சியுடன் செய்ததை நான் பாராட்டுகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் எந்த போராட்டத்தையும் வேடிக்கைக்காகவோ, விளையாட்டிற்காகவோ ஆரம்பிக்காது! எந்த வித அடக்குமுறைகளுக்கும், பலமான அடிதடிகளுக்கும் எந்த வித இன்னல்களுக்கும் சித்தமாக இருந்தே அதில் இறங்கும். திரவிடர் இயக்கம் இந்த நாட்டில் பல முறை இந்தியை எதிர்த்துப் போராடி வந்திருக்கிறது. பல்லாண்டுகளாகவே இந்தி எதிர்ப்புப் போராட்டங்களை நடத்தி போர்க்

(7ம் பக்கம் பார்க்க)

ஊனக்கண்ணை நம்பாதே ! எங்கள் அண்ணாவின் ஞானக்கண்ணை நம்பு!

(8ம் பக்கத் தொடர்ச்சி)

கொடிகளை உயர்த்தி வந்திருக்கிறது.

1938ம் ஆண்டிலும் 1948ம் ஆண்டிலும் 1958ம் ஆண்டிலும் இந்தியை எதிர்த்து பலமான போராட்டம் நடத்தியது. ஏகாதிபத்திய சின்னமான இந்தியை ஆதிக்கக்காரர்கள் புகுத்திய நேரங்களிலெல்லாம் திராவிடர்கள் வாளா விருந்ததில்லை. அதை எதிர்த்துப் போராடியே வந்திருக்கிறார்கள்.

1938ல் திருவாரூரில் நடந்த ஒரு சம்பவத்தை உங்களுக்குக் கூற நான் ஆசைப்படுகிறேன். நான் சிறியவன். அதாவது மாணவனாக இருந்த பருவம். திருவாரூரில் இந்தி எதிர்ப்பு நடவடிக்கைகள் பலமாக நடந்து கொண்டிருந்த காலம். அங்கே ஊர்வலங்களும், இந்தி எதிர்ப்புக் கூட்டங்களும் அடிக்கடி நடந்தவண்மாகவே இருக்கும். நான் உற்சாகத்துடன் அவைகளில் கலந்து கொள்வேன். ஊர்வலங்களில் கொடிதூக்கும் சிறுவனாக முன்னணியில் நிற்பேன். எனக்கு இன்னும் நன்றாக ஒரு சம்பவம் நினைவிருக்கிறது. 1938-ல் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி பலமாக இருந்த நேரத்தில் நானே ஒரு துண்டு அறிக்கையைத் தயாரித்து திருவாரூர் திராவிடர் கழகத்தின் ஆதரவில் அச்சிட்டு ஒவ்வொரு வீடுகளிலும், தெருக்களிலும் சர்க்கார் பணிமனைகளிலும் கொடுத்தவந்தேன். நான் படித்து வந்த இந்தி ஆசிரியர் அந்த தெரு வழியாக– நான் பிரசுரங்களை வழங்கிவந்த தெருவழியாக வந்தார். அவரிடமே அந்தத் துண்டு பிரசுரத்தைக் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அதை வாங்கிய இந்தி ஆசிரியர் தான் கொடுத்தது தெருவானதால் மகிழ்ச்சியோடு பெற்றுக் கொண்டு சென்று விட்டார்; ஆனால் வகுப்பில் எனக்குத் தண்டனை கிடைத்தது.

மறுநாள் இந்தி ஆசிரியர் வகுப்பில் இந்தியில் எழுதப்பட்ட ஒரு துண்டுக் கடிதத்தைக் கொடுத்து என்னைப் படிக்கும்படிக் கூறினார். நான் அதை படிக்க மறுத்தேன்—காரணம் அது எனக்குப் புரியாததால்! உடனே இந்தி ஆசிரியர் என் அருகில் வந்தார். நான் அந்தத் துண்டு பிரசுரத்தை அவரிடமே கொடுத்ததை மனதில் வைத்துக் கொண்டு கன்னத்தில் டளார் பளார் என்று அறை கொடுத்தார். அன்று நான் வாங்கிய அறை இன்றும் எனக்கு ஞாபகம் இருக்கிறது.

மாணவனாக இருந்த காலத்தில் இந்தியை எதிர்த்ததால் அடிபட்டேன். இன்று தமிழினைஞர்கள் தங்களின் தாய் மொழிப்பற்றால் இந்தி அரக்கியை அடித்து அடித்து விரட்டுகிறார்கள். கலை உணர்ச்சியில் கற்பனையால் செய்து காட்டப்பட்ட அந்த நிகழ்ச்சி உண்மை நிகழ்ச்சியைக் காட்டுவது போன்று இருந்தது. அன்று என்னை அடித்த ஆசிரியர் இன்று வேலையிலில்லை. இன்று ஆசிரியத் தொழிலை விட்டுவிட்டு மருத்துவ வேலையில் ஈடுபட்டிஇருக்கிறார். நாம் 1938-ல் இந்தியை எதிர்த்துப் போரிட்டோம். அதன் விளைவாக காங்கிரஸில் ஈடுபட்டிருந்த என். வி. நடராசன் நம்மிடம் வந்து சேர்ந்தார். அன்று இந்தியை எதிர்த்ததன் பயனாக ஆச்சாரியார் நமது அறிஞர் அண்ணா அவர்களை சிறையில் அடைத்து தொல்லைகளைக் கொடுத்தார். பெரியார் அவர்களை பெல்லாரி சிறையில் அடைத்தார். 1008 தமிழ்வீரர்களை சிறையில் அடைத்துக் கடும் தண்டனைக்குள்ளாக்கினார். அந்த 1008 பேரில் இருவர் உயிரிழக்க வேண்டியதாயிற்று; அவர்கள்தான் தாளமுத்து—நடராசன்.

உங்களுக்கு 1938-ம் ஆண்டு நடைபெற்ற இன்னும் ஒரு சந்தர்ப்பத்தை நினைவூட்ட ஆசைப்படுகின்றேன்.

மறைந்த வீரன் அஞ்சாநெஞ்சன் அழகிரிசாமி அவர்களின் தலைமையில் தஞ்சையிலிருந்து ஒரு மாபெரும் இந்தி எதிர்ப்புப் படை கால்நடையாகவே சென்னைக்குப் புறப்பட்டது. அந்த படையை மூவலூர் இராமாமிர்தத்தம்மையார் அவர்கள் முன்னேடியாக இருந்து நடத்தி வந்தார்கள். அந்த படை தஞ்சையிலிருந்து திருச்சிக்கு வந்து திருச்சியிலிருந்து தென்னாற்காடு மாவட்டம் வழியாக சென்னை நோக்கி வந்துகொண்டிருந்தது. இதைக் கண்ட காங்கிரஸ்காரர்களுக்கு பீதி ஏற்பட்டது. தாளடைந்த பீதியை மறைக்க அவர்கள் 'படையாமே படை' என்று கேலி பேசினர். அந்த படையை இந்த வழியே செல்லவிடக் கூடாது என்று எண்ணினர். படை வருகின்ற பாதையில் பழம் செருப்புக்களை தோரணமாகக் கட்டித்தொங்க விட்டனர். இதைக் கண்டவுடன் எல்லோருடைய உள்ளமும் கொதித்தது.

கட்டினவர்கள் மீது ஆத்திரமும் ஆவேசமும்கொண்டார்கள். அந்த தோரணங்களை அவிழ்த்தெறிந்து விட்டு படையினர்போகவேண்டுமென்று தமிழ்பெருங்குடி மக்கள் கொதித் தெழுந்தார்கள். ஆனால் அண்ணன் அழகிரிசாமி அவர்கள் ஆத்திரப்பட்டவர்களை அடக்கி சமாதானப் படுத்தி நீங்கள் அந்த தோரணங்களை அவிழ்க்க வேண்டாம். கட்டியவர்களையே அவிழ்க்கும்படிச் செய்வோம். என்று கூறிவிட்டு அங்கே ஒரு நீண்ட சொற்பொழிவாற்றினார். அந்த சொற்பொழிவைக்கேட்ட செருப்பு தோரணம் கட்டியவர்கள் தங்கள் தவறை உணர்ந்து அதை அவிழ்த்துவிட்டு அண்ணன் அழகிரி அவர்களுக்கும் படையினருக்கும் விருந்து வைத்து சென்னைக்கு வழிகூட்டி அனுப்பினார்கள்.

1938ல் நாம் இப்படியெல்லாம் துன்பங்களை ஏற்று இந்தியை விரட்டி அடித்தோம். ஆனால் இன்றுள்ள ஒரு சிலர் தமிழ் பற்றோ, நாட்டுப் பற்றோ இல்லாமல் நம்மை எதிர்த்து வருகிறார்கள். இந்தியை எதிர்ப்பதற்கு தைரியம் இல்லாமல் அஞ்சி நம்மைக் காட்டிக் கொடுக்கும் கயவர்களாகவும் எட்டப்பர்களாகவும் வாழ்ந்து வருகிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகம் இந்தியை எதிர்ப்பதற்காக— போராடி விரட்டுவதற்கான திராணியும், தெம்பையும் கொண்டு இன்றுபோர்க்களத்தில் இறங்கி இருக்கிறது.

நாம் அடைந்துள்ள வெற்றியைப் பற்றி ஒருசிலர் நம்மை கேலியும், கிண்டலும் செய்வதுடன் இழித்தும் பழித்தும் பேசி வருகிறார்கள்.

ஒருவர் நம்மைப் பற்றி பேசுகின்ற போது "நான் கண்ணால் பார்க்கிறேன். எப்படி அண்ணாத்துரையின் சொல்லை நம்புவது ?" என்று கேட்கிறார். அண்ணா அவர்கள ஞானக்கண்ணோடு கண்டு சொல்கிறார். நீ ஊனக் கண்கொண்டு பார்க்கிறாய். அதனால் ஒன்றும் நன்மை வந்துவிடாது. ஞானக் கண்கொண்டு கூறுவதை தான் மக்கள் நம்புவார்கள். எனக்கு நன்றாக நினைவிருக்கிறது சிந்தாமணி என்ற படத்தில் "உன் கண்ணே உனக்குச் சத்துரு" என்று கூறப்பட்டிருப்பது அதைப்போலவே உன் கண்ணே உனக்குச் சத்துருவாக இருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகம் கறுப்புக்கொடி காட்டுவதை கைவிட்டதைப் பற்றி எள்ளி நகையாடுகிறார்கள். ஆனால் அவர்களுக்கு முன்னேற்றக் கழகத்தின் முயற்சியில் வெற்றி கிடைத்ததை அறிய முடியாத நிலையில் இருக்கிற அப்பாவிகளே அவ்வாறு சொல்கிறார்கள்.

முதலமைச்சர் காமராசர் இன்று போகின்ற இடங்களிலெல்லாம் நம்மைத் தாக்கிப் பேசி வருகிறார் நாம் கருப்புக் கொடி காட்டுவதை கை–விட்டதை கிண்டல் செய்தும் வருகிறார்.

முதலமைச்சர் காமராஜர் மதுரை மாவட்டத்தில் சுற்றுப் பயணம் செய்து விட்டு மதுரை ரயில் நிலையத்தில் வந்தபோது பத்திரிக்கை நிருபர்கள் நாம் கறுப்புக்கொடி நிகழ்ச்சியை கைவிட்டதை அவரிடம் தெரிவித்தனர், அதைக்கேட்ட காமராஜர் "விட்டது தொல்லை" என்று ஆயாசத்துடன் கூறி இருக்கிறார். அப்படி கூறியவர் அதே நிருபர்களிடம் "கம்யூனிஸ்ட் கட்சியும், சுதந்திரா கட்சியும் ஆதரவு கொடுக்காததால் தான் கைவிட்டு விட்டனர் என்று கேலியாகக் கூறி இருக்கிறார். நான் காமராஜரை கேட்க விரும்புகிறேன்; நாங்கள் நடத்திய எந்தப் போராட்டத்தில் கம்யூனிஸ்டுகளுடனும், சுதந்திரா கட்சியுடனும் கூட்டு சேர்ந்திருந்தோம் ?

பண்டித நேரு தென்னகத்தில் உள்ளவர்களை காட்டுமிராண்டிகள் என்றும், 'பெண்டாஸ்டிக் நான்சென்ஸ்" என்றும் கூறி இழிவு படுத்தியதை கண்டிப்பதற்காக முன்னேற்றக் கழகம் பண்டித நேருவுக்கு கறுப்புக் கொடி காட்டுவதென முடிவு செய்தது. இதை அறிந்த சர்க்கார் முன்னேற்றக் கழகத்தை அதிகார பலத்தால் அடக்கி விடலாம் என்ற எண்ணத்தால் அடக்குமுறைகளைக் கையாண்டு பார்த்தது. முன்கூட்டியே அறிஞர் அண்ணா அவர்களையும், மற்ற தலைவர்களையும் கைது செய்துவிட்டு நகரில் வலைவீசி 5000 பேர்களுக்கு மேல் நேரு வருவதற்கு முன்பே சிறையிலடைத்தார்கள், ஆனால் நேரு கண்டே திகிலடையும்படியும், அதிகாரிகளே பிரமிக்கும்படியும் கறுப்புக் கொடி காட்டப்பட்டது. அப்போது கம்யூனிஸ்டு கட்சி ஆதரிக்கவில்லை! சுதந்திரா கட்சி பிறக்கவேயில்லை! அன்று நடந்தது என்ன? அந்த நிகழ்ச்சிகளை காமராசர் கண்ணாரக் கண்டிருந்தும் மறந்து போய் பேசுகிறாரா ?

காமராஜரும் மற்ற அமைச்சர்களும் நமமைப் பற்றியும், நமது கழகத்தைப் பற்றியும் 6-ம் தேதியிலிருந்து 16ம் தேதி வரை ஒன்றுமே பேசாமல் வாய் மூடிக் கிடந்தார்கள். அதற்கு பின் வாய்திறந்து மிக இழிவான முறையில் பேச முனைந்திருக்கிறார்கள். 16ந்தேதிக்குப் பின் கறுப்புக் கொடி காட்ட முடியாது; இனி என்ன செய்ய முடியும் என்ற எண்ணத்தினாலேயே இழிவான முறையில் பேச முற்பட்டு விட்டார்கள்.

சட்டமன்றத்தில் கவர்னர் உரைமீது பேசிய காங்கிரஸ்

(10ம் பக்கம் பார்க்க)

நாடகத் தமிழ் காக்கும் நல்லறிஞர்

★ [ப. கண்ணன்] ★

மொழியிற் சிறந்தது முத்தமிழ் என்பார்கள். முத்தமிழில் ஒன்று நாடகத் தமிழ். இயற்றமிழின் இனிமையும், இசைத் தமிழின் சுவையும் கலப்புற்று மிளிர்ந்து கருத்தைக் கவர்வது நாடகத் தமிழ்!

இயற்றமிழில் வல்லோரை சிறந்த நூலாசிரியர்கள் என்றனர்; இசைத் தமிழில் வல்லோரை சிறந்த பாடகர்கள் என்றனர்; சிறப்புச் செய்தனர்; வரவேற்று வாழ்த்தினர் மக்கள்! சமுதாயத்திலே அவர்கட்கு உயர்விடம் கிடைத்தது.

நாடகத் தமிழ் வல்ல நடிகர்களை சிறந்த நடிகர் என்றார்கள்; ஆனால் சிறப்புச் செய்யவில்லை; வரவேற்பும் வாழ்த்தும் நல்கவில்லை. சமுதாயத்திலே அவர்கட்கு உயர்விடம் கொர்டுக்கவில்லை, நாடகத் தமிழ் பழம் பெருமை பெற்றதெனினும் இவ்வாறு புறக்கணிக்கப்பட்டது. நடிகர்கள் தனிப் பிறவிகளாக ஒதுக்கப்பட்டிருந்தனர்.

இராவ்பகதூர் பம்மல் சம்பந்தனார், திருச்சி எஃப். ஜி நடேசனார் போன்ற படிததவர்கள் நாடகம் எழுதினார்கள், ஆடினார்கள். எனினும், அவை நிலையில் பெருமாற்றத்தை விளைத்திடவில்லை. படித்த நடிகர்களுக்குப் படித்தவர்கள் மட்டுமே மரியாதை காட்டினர்; அறிஞர் அண்ணா அவர்களின் நாடக நுழைவுதான் படிக்காத நடிகர்களைப் படித்தவர்களும படித்த நடிகர்களைப் படிக்காதவர்களும் பாராட்டும்படியான புரட்சியை விளைவித்ததும் முத்தமிழில் ஒன்றான நாடகத் தமிழுக்கும் தக்கதொரு ஏற்றம் கிடைத்தது! எழில் கிடைத்தது!

தமிழகத்தில் புதியதோர் சிந்தனைப் புரட்சியை விளைவித்த பெருமை, பெரியார் ஈ. வெ. இராமசாமி அவர்களையும், சுயமரியாதை இயக்கத்தையும் சாரந்ததாகும். இஃது எவரும் மறுக்க இயலாத ஒன்று.

"குடியரசு" எழுத்திலும், பெரியார் பேச்சிலும், தொண்டர் தம் பணியிலும் வளர்ந்து வந்த கொள்கை, அண்ணா அவர்கள் இயக்கத்தில் கலந்த பின்னர் புது வடிவு பெறத் தொடங்கியது...பெரியார் வளர்த்த கூட்டில் சுவையொன்று சேர்ந்தது! கூடும் சுவையுமாக வளர்ந்தது இயக்கம்!

"கலையில் ஈடுபட்டால் கருத்து சிதைவுறும். இலட்சியம் வழவிடும்" என்று சமண முனிவர் போல் சொல்லிக் கொண்டிருந்தார் பெரியார். எனவே நாடகமாடவேண்டும் என்று முனைந்த தோழர் சு. இரத்தினசபாபதி போன்றவர்களை உருட்டி விழித்து மடக்கி விட்டார்! அவர்தம் முயற்சிகளைக் குலைத்து விட்டார்.

அண்ணா அவர்கள் பிரசார நாடகம் எழுதினார்கள். நடிக்க முயன்றார்கள், தனது எழுத்தாலும் பேச்சாலும் இளைஞர்களிடம் அண்ணா பெற்றிருந்த செல்வாக்கு — அண்ணா அவர்களால் இயக்கம் பெற்று வருகிற புதுப்பொலிவு பெரியாரின் வாயைக் கட்டின, "சந்திரோதயம்" வளர்ந்தது. பெரியார் அவர்களின் தலைமையிலேயே 'சந்திரோதயம்" நாடகத்தை நடத்தியும், நடித்தும் காட்டினார்கள் அண்ணா. பாராட்டினார் பெரியார். "காசைக் கொடுத்து நம் கருத்தைச் சுவைகக வருகிறார்களே மக்கள்!" என்று மகிழ்ந்தார். எனினும் முழுமையாக ஆதரவு காட்டிடவில்லை மறைமுகமாக எதிர்க்கவும் செய்தார்,

பெரியார் பெற்ற சிறு மகிழ்ச்சியை மூலதாரமாகக் கொணடே "சந்திரோதய"த்தைப் பலவூர்களில், பல மாநாடுகளில் நடததினார்கள் அண்ணா, இயக்கத்திற்கு வருவாய் தேடிக் கொடுத்ததோடு, பகுத்தறிவுக் கருத்துக்களுக்கு கலை வடிவு கொடுத்து. நாடகத் துறையினர்க்கு ஓர் புத்தெழுச்சியை உண்டாக்கினார்கள்.

கலைத்துறையில் அண்ணா அவர்களின் கருத்தும் செயலும் பெருவலிவு படைத்தவை! தொடக்க முதல் நமது இயக்கத்தில் ஈடுபாடு கொண்டவர்கள் இதனை நன்கறிவர்.

"நாடகம், கொள்கையை நலிய வைக்கும் என்று நாடக முயற்சிகளை முறியடித்து வந்த பெரியார் ஒரு நாடக ஆசிரியராகவே மாறினார்!

பெரியார் அவர்களின் ஆராய்ச்சி முடிவுகளின் அடிப்படையில் "வீரவாலி" என்றொரு நாடகத்தை நான் உருவாக்கினேன், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் நிதிக்காக அண்ணா அவர்கள் தலைமையிலும், புரட்சிக் கவிஞர் முன்னிலையிலும் நடத்தினேன்.

அப்பொழுது கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் பகுத்தறிவுக் கருத்துக்களைத் திரையுலகில் புகுத்திப் பரப்பி வருகின்ற நேரம், என் பெயரும் ஜே. பி. கிருஷ்ணன்; எனவே கலைப் புரட்சியில் இரு பெயர்களையும் இணைத்துக் காட்டிப் பாராட்டினார்கள் அண்ணா. புதுவொளி பெற்றேன் நான்.

பின்னர் அதே நாடகத்தை பெரியார் அவர்கள் தலைமையில் நடத்திக் காட்டினேன். இராமாயண ஆராய்ச்சி குறித்துப் பேசினார்களே யொழிய நாடகத்தையோ, நடிப்பையோ சிறிதும் பாராட்டவில்லை. ஆனால் தனித்திருக்கும் பொழுது கூறினார்கள் "இராமாயணம் முழுதையுமே இதுபோல் ஒரே நாடகமாக நடித்துக் காட்டினால் நன்றாக இருக்கும்" என்று, "நான் எழுதுகிறேன். முடிந்தால் நானேகூட தசரதனாக நடிக்கலாமென்று நினைக்கிறேன்" என்றார்கள். என்னைப் பரிகசிப்பதாகவே நான் கருதினேன்.

சில ஆண்டுகளுக்குப் பிறகு பெரியார் அவர்கள் எழுதிய "இராமாயண" நாடகம் நடிகவேள் எம். ஆர். ராதா அவர்களால் அரங்கேற்றப்பட்டது. நாடகக் கலையை எதிர்த்து வநத பெரியார், நாடகம் எழுதும் ஆசிரியராக மாறிய விந்தையை நாம் கண்டோம்! இது அண்ணா அவர்கள் தொடங்கி வைத்த நாடகப் புரட்சியால் ஏற்பட்ட நல்விளைவாகும்.

அண்ணா அவர்கள் வரைந்த "சிவாஜி கண்ட இந்து ராஜ்யம்" சிறந்த வரலாற்று நாடகம். அந்நாடகம் பெரியார் தலைமையில் அரங்கேறியது. அதில் சிவாஜியாக நடித்த சாதாரண வி. சி. கணேசன் சிவாஜி கணேசனாக மாறினார்! பெரியார் பாராட்டினார்கள். சிவாஜி என்ற பெயர் பெயர்க்க முடியாதபடி தோழர் கணேசன் பெயரோடு இணைந்து விட்டது. "கட்டபொம்மன் என்றார்கள், "பாரதி" என்றார்கள். ஒட்டவில்லை; ஒளிரவில்லை! அண்ணா அவர்கள் நாடகத்தில் சிவாஜி பாத்திரத்தை உருவாக்கியிருநத பண்பே அவரை உடர்தியது!

அண்ணா அவர்களின் பேச்சும் எழுத்தும் பல்லாயிரக் கணக்கான கல்லூரி மாணவர்களை இயக்கத்தின்பால் ஈர்த்தன. நாடகங்கள், இலட்சக் கணக்கான பொதுமக்களுக்கு புத்துணர்ச்சி யளித்தனவென்பது மிகையன்று, பேருண்மை.

நாடகக் கலையாக்கத்தில் அண்ணா அவர்களின் பாணி தனித்தன்மை வாய்ந்தது. நிகழ்ச்சிகளும், பாத்திரங்களின் பேச்சு முறையும் காலத்தையும் கருத்தையும் தழுவி நிற்பன. சமுதாயத்திலே படிந்துள்ள மூடநம்பிக்கைகள், உயர்வு தாழ்வுகள், பிராம்மணீயக் கொடுமைகள், மதக் கேடுகள், அரசியல் அடிமைத் தனங்கள், அழிவற்ற நடைமுறைகள், ஆகியவற்றைப் பண்போடு எடுத்துக் காட்டி, மக்களைப் பகுத்தறிவுப் பாதையில் திருப்பிவிட்டுத் தன்மானபுரியின் விடுதலை மாளிகை நோக்கி நடை பயிலச் செய்வன! அறியாமை இருளகற்றும் அறிவுலக கலைச்சுடர்கள்! நாட்டுக்கும் மொழிக்கும் பெருமை நல்குவன!

அண்ணா அவர்களின் கலையாக்கமும், கருத்து நிறை உணர்ச்சி வசனமும் ஒரு சிவாஜி கணேசனை யுண்டாக்கியதோடு மட்டுமன்று; பட்டி தொட்டிகளிலும் பல சிவாஜிகளை உண்டாக்கிக் கொண்டிருக்கின்றன. மேலும் மேலும் உண்டாக்கும் சக்தி படைததவை, அண்ணா அவர்களின் நாடகப் படைப்புகள்!

அண்ணா அவர்களின் நாடகங்கள் மட்டுமன்று; அவர்தம் வழியினைப் பின்பற்ற அருமைத் தம்பிகள் வரைந்துவரும் நாடகங்களும் நடிகர்களைப் பெரும் அளவுக்குப் படைத்து வருகின்றன! நடிகர் புகழ் பெருக்கி வருகின்றன.

"வேலைக்காரி" "ஓர் இரவு" "காதல் ஜோதி" போன்ற அண்ணா அவர்களின் கருத்துக் கருவூலங்களை நாடெங்கும் நடததியவர்—நடத்தி வருபவர் என்ற தனிப்பெருமை நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி அவர்களைச்சார்ந்ததாகும். அண்ணா அவர்களின் நாடகக்

[12ம் பக்கம் பார்க்க]

ஆட்சியாளர்கள் அடக்குமுறையை நம்பவேண்டாம் - ஆகஸ்டு புரட்சி ஞாபகமிருக்கட்டும் !

(நாவலர் பேச்சு)

(4ம் பக்கத் தொடர்ச்சி

மற்றவர்கள் ஓடிவந்து அடிப்பார்கள்! அந்தநிலையில இன்று இங்கே பலர் இந்தியை எதிர்க்கின்றனர் !

மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 6 கோடி ரூபாய் இந்தி மொழியை பரப்புவதற்காக மட்டும் ஒதுக்கப்பட்டிருக்கிறது ! தமிழுக்கு ஒரு கோடியுமில்லை ! வாக்குறுதிபாட்டிற்கு வாக்குறுதி இருக்கட்டும் என்று இதனைச் செய்கிருர்கள் போலும் ! எனவேதான் இவர்களின் வாக்குறுதி சட்டத்தின் வாயிலாக உறுதி செய்யப்பட வேண்டும் என்று நாம் மட்டுமல்ல, நாட்டிலே பலரும் கேட்கின்றனர் !

பண்டிதரே ! நீர் பல்லாண்டு காலம், நூருண்டு காலம் வாழும்! தப்பித் தவறி வேறு யாருவது பதவிக்கு வந்து விட்டால் இந்தி வெறியர்களிடமிருந்துகாப்பாற்றப் படவேண்டும் ! அதற்காக சட்டத்தை திருத்தி எங்களைக் காப்பாற்றுங்கள் "இன்று—நாம் பிடித்த பிடியை வைத்துக் கொண்டு நாட்டிலே பலரும் கேட்கின்ருர்கள்! ஆனல் நம்மை மட்டும் கேலி பேசத் தவறுவதில்லை, கிண்டல் செய்யத் தவறுவதில்லை! நம்மை அவர்கள் இழித்தும், பழித்தும் பேசட்டும் ! நாம் அதைப் பற்றித் துளியும் கவலைப் படத்தேவையில்லை!

இந்தியத் துணைக்கண்டத்து குடியரசுத் தலைவர் இனி இங்கு வரவே மாட்டாரா ? நேரு இங்கே வரவே மாட்டாரா ? வேறு எந்தத் தலைவர்களும் வட நாட்டிலிருந்து இங்கு வரவே மாட்டார்களா ? அவர்கள் கேலி செய்து கொண்டே இருக்கட்டும் ! அவர்களுடைய கேலியும்தான் எந்த அளவிற்குச் செல்லுகிறது என்பதைப் பார்த்துவிடுவோம் !

ஒன்றை மட்டும் நீங்கள் நன்ருக ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும் ! கோடம்பாக்கம் மாநாட்டில் அறிஞர் அண்ணு அவர்கள் கறுப்புக் கொடி காட்ட வேண்டும் என்று சொன்னவுடன் விண்ணதிர கையொலியை எழுப்பித் துள்ளி எழுந்து புறப்பட்டனர் ! வேண்டாம் என்று சொன்னவுடன் அப்படியே எல்லோரும் அடங்கி விட்டனர் !

நாங்கள் கூட முதலில் பயந்தோம் ! உணர்ச்சி வசப்பட்டவர்கள் எங்கேயாவது கருப்புக கொடி காட்டி விட்டால் என்ன செய்வது என்று கொஞ்சம் அஞ்சினேம்! ஆனல் அறிஞர் அண்ணுவின் கட்டளைக்கு அப்படியே பணிந்து விட்டார்கள்! "கட்டளையை ஏற்போம்—இட்ட கட்டளை வழிபடியே நடப்போம் என்று அண்ணுவின் ஆணைக்கு அப்படியே கட்டுப்பட்டு நின்று விட்டார்கள் !

"நீங்கள் இந்தியை எதிர்த்தீர்களே ! இனி ஸ்டாம்பில் இந்தி போய் விடுமா ? காசில் இந்தி போய் விடுமா ?" என்று காங்கிரஸ்காரர்கள் கேலி மொழி பேசுகிறர்கள்! "கல்லக்குடி போராட்டம் நடத்தினுர்களே ! வெற்றி பெற்ருர்களா ?" என்றும் பேசுகிருர்களாம் ! கேலி பேசும் காங்கிரஸ்காரர்கள் மட்டும் எல்லா போராட்டங்களிலும் வெற்றி பெற்றுக் கொண்டே வந்தார்களா ? அவர்கள் எத்தனைப் போராட்டங்களை நடத்தினுர்கள்! அதிலேஎத்தனைப் போராட்டங்களிலே வெற்றி பெற்ருர்கள் ? எத்தனைப் போராட்டங்களிலே தோற்ருர்கள் !

1921-ம் ஆண்டு சட்ட மறுப்பு இயக்கம் நடத்தினீர்களே ! "சட்டத்தை மதிக்க மாட்டோம், ஆங்கிலேயன் போட்ட சட்டத்திற்கு ஒரு நாளும் அடங்க மாட்டோம் !" என்று முழக்க மிட்டீர்களே ! உடனே உங்கள் போராட்டம் வெற்றி பெற்றதா ? விஜயராகவாச்சாரி, சத்தியமூர்த்தி, பெரியார் போன்றவர்களெல்லாம் அந்த சட்ட மறுப்பு இயக்கத்தில் கலந்துகொண்டார்கள்! நீங்கள் சட்ட மறுப்பு இயக்கத்தை துவங்கிய உடனேயே வெள்ளைக்காரன் ஓடி விட்டானு ? நீங்கள் 1921-ம் ஆண்டு சட்ட மறுப்பு இயக்கத்தை ஆரம்பித்தீர்கள்! அப்போதே, அந்த நேரத்திலேயே வெள்ளைக்காரன் கதி கலங்கி ஓட்டம் பிடித்தானு ?

நீங்கள சட்ட மறுப்பு இயக்கத்தை ஆரம்பித்து 1927-ல் அவன் வெளியேறினதோ 1947-ல். 1921-ல் நடைபெற்ற சத்தியாக்கிரகம் எப்போது பலன் கிடைத்தது ! 1921,—1925,—1931 வரை இருந்தது! மேலும் பல புதிய சட்டங்களை வெள்ளைக்காரன் போட்டான் ! காந்தியாரே போராட்டத்தில் கலந்து கொண்டார் ! கலந்து கொண்டும் என்ன பயன் ? மேலும் அவன் போட்டுக் கொண்டே வந்த புதிய சட்டங்களுக்கு அடங்கி, ஒடுங்கி தானே கிடந்தீர்கள் !

1936-ம் ஆண்டு அந்த வெள்ளைக்காரன் போட்ட சட்டங்களுக்கு அடங்கி நீங்கள் தேர்தலில் நிற்கவில்லையா ? 1937-ம் ஆண்டில் ஆங்கிலநாட்டுச் சக்ரவர்த்தியின் பேரால் ராஜ விஸ்வாசம் செய்து பதவியை ஏற்கவில்லையா ?

1946ல் இடைக்கால சர்க்கார் ஒன்றை நீங்கள் ஏற்றுக் கொண்டு பதவியில் வீற்றிருக்கவில்லை ?

அருமை காங்கிரஸ் நண்பர்களே ! நீங்கள் கள்ளுக் கடைகளை ஒழிக்க முன் வந்தவுடனேயே எல்லா கள்ளுக் கடைகளையும் ஒழித்துக் கட்டி விட்டா உட்கார்ந்திருந்தீர்கள் ? 1927-ல் இருந்த கள்ளுக் கடைகளைவிட 1928-ல் இருந்த கள்ளுக் கடைகள் மிக மிக அதிகமாகும். 1930-ல் குடிக்காதீர்கள் என்று பிரச்சாரம் செய்தீர்கள் ! உடனே குடிபழக்கம் நின்றதா ? 1927ல் இருந்த கள்ளுக் கடைகளைவிட 1937ல் கள்ளுக் கடைகள் ஏராளம். மிக ஏராளம் !

கள்ளே கூடாது என்று முழங்கினீர்கள் ! உடனே கள்ளே இல்லாமல் போய்விட்டதா ? இன்னும் உன்னுன் காரைக்காலில் கள்ளுக் கடைகளை ஒழிக்க முடியவில்லையே ! நண்பர் ஒருவர் நினைவுபடுத்துகிருர்—தேர்தல் காலத்தில், "காரைக்காலில் கள்ளுக் கடைகளை ஒழிக்க மாட்டோம்" என்று உறுதியும் தந்தார்களாம் ! இவர்கள்தான் கேட்கிருர்கள் "இந்தி ஒழிந்தே போய் விட்டதா" என்று !

திருப்பூர் குமரன் கொடி போராட்டம் நடத்தினுன் ! "பிரிட்டிஷ் சர்க்காரின் யூனியன் ஜாக் இந்த நாட்டில் எங்குமே பறக்கக் கூடாது" என்று முழக்க மிட்டான்! பறந்தால் காங்கிரஸ் கொடிதான் பறக்க வேண்டும், யூனியன் ஜாக் பறக்கவே கூடாது என்று வீறு

(11ம் பக்கம் பார்க்க)

திருமண அழைப்பிதழ்

★★★

18—9—60 ஞாயிறு காலை 9-மணி அளவில் திரு. இராமலிங்கம் அவர்களின் குமாரனும், திரு. சி. ஆர். பாலசுந்தரம் அவர்களின் சகோதரருமான

திரு. வானவரம்பனுக்கும் (கஜேந்திரன்)

" மாலை மணி " துணை ஆசிரியர் திரு. A. சங்கரய்யா அவர்களின் புதல்வி

திருமதி நாகம்மாளுக்கும்

நாவலர் **இரா. நெடுஞ்செழியன்** அவர்கள் தலைமையில் சென்னை நுங்கம்பாக்கம், அவின்யூ சாலை, 9-ம் எண்ணுள்ள இல்லத்தில் (அண்ணு அவர்கள் இல்லம்) திருமணம் நடைபெறும். அன்பர்கள் அனைவரும் வந்திருந்து திருமணத்தை சிறப்பிக்கவேண்டுகிறேம்.

தங்கள் அன்புள்ள,

சி. ஆர். பாலசுந்தரம்	சி. என். அண்ணுதுரை
(சென்னை நகர மன்ற உறுப்பினர்)	இராணி அண்ணுதுரை
	ஈ. வி. கே. சம்பத்
கமலா பாலசுந்தரம்	சுலோச்சனு சம்பத்

வெற்றிக்கொடியை நாட்ட விடுதலை வீரர்களே புறப்படுங்கள்!

கருணாநிதி பேச்சு

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

சட்டமன்ற கொரடா நண்பர் கருத்திருமன் அவர்கள் குடியரசுத் தலைவர் பாபு ராஜேந்திரர் வரும்போது கருப்புக் கொடி காட்டுவதற்கு சக்தஇல்லாமலும் அதற்குத் தைரியமில்லாமலும் சரணாகதி அடைந்து விட்டோம் என்று பேசினார். இதைக் கேட்டுக் கொண்டிருந்த நமது சட்ட மன்ற உறுப்பினர் கடம்பூர் அண்ணாமலை அவர்கள் "இப்பொழுது ஒன்றும் குடி முழுகிப் போய் விடவில்லை. நாங்கள் அரசியல் கண்ணியத்தினால் கறுப்புக் கொடி காட்டுவதை நிறுத்தி இருக்கிறோம். குடியரசுத் தலைவர் பாபு இராஜேந்திர பிரசாத் சென்னை நகரில்தான் இருக்கிறார். காங்கிரஸ் கொரடா எங்கள் சக்தியையும் திறமையையும் பார்க்க வேண்டுமென்று விரும்பினால் அதையும் பார்க்கட்டும்! நாங்கள் அவர் விடுத்துள்ள சவாலை ஏற்று குடியரசுத் தலைவருக்கு கறுப்புக் கொடி காட்ட தயாராக இருக்கிறோம். இது அவருக்கு விருப்பம்தானா? வீணாக வம்புக் கிழுத்து—வலுச் சண்டைக்கு அழைத்து எங்களை சந்திக்கு இழுக்க வேண்டாம்" என்று பேசினார். இதைக் கேட்டகொறடாபதைபதைத்து எழுந்து நண்பர் அண்ணாமலை நான் பேசியதை தவறாகப் புரிந்துக் கொண்டார். கறுப்புக் கொடி பிடிக்க வேண்டுமென்று நான் சொல்லவில்லை; கறுப்புக் கொடி பிடிக்க வேண்டாம். நான் பேசியதில் தவறிருந்தால் மன்னித்துக் கொள்ளுங்கள் என்று மன்னிப்புக் கேட்டார்.

நாம் கறுப்புக் கொடி பிடிக்காமல் பயந்துவிட்டோம். சரணாகதி அடைந்து விட்டோம் என்று நம்மை கேலியும், கிண்டலும் செய்து தோள் பலத்தைக் காட்டியும், தொடையைத் தட்டியும், மீசையை முறுக்கியும் நம்மை வம்புக் கிழுக்கிறார்கள். குடியரசுத் தலைவர் சென்னையைவிட்டு 1000 மைல்களுக்கு அப்பால் போனபிறகு இப்படி பேசுகிறார்களே தவிர அவர் சென்னையிலிருந்தபோது எதுவுமே பேசவில்லை. வாயையே திறக்காமலிருந்தார்கள்.

தமிழன் வீரமரபுடையவன். அவன் புகழ் அவனி எங்கும் பரவி வந்தது. தமிழர்களின் புகழையும் பெருமையையும், தமிழ் இலக்கியங்களும், வரலாறுகளும் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. தமிழ்நாட்டின் புகழ் படைத்த மன்னனான சேரன் செங்குட்டுவனை ஆரிய மன்னர்களான கனக விசயன் என்பவர்கள் இழிவுபடுத்திப் பேசியதாக ஒற்றர்கள் கூறியதைக் கேட்டு சினம் கொண்டான் செங்குட்டுவன். நம்முடைய வீரத்தையும், புகழையும் இழிவுபடுத்திய மன்னனை தென்னகத்திற்கு வருவான் என எதிர்பார்க்காமல் அவன் வாழும் இமயத்திற்கே சென்று அவர்களைப் போரில் வென்றுஇமயத்தின் நெற்றியில் தமிழகத்தின் வில் புலி, கயல் பொறித்த கொடிகளை நாட்டியதாக அறிகிறோம்.

அந்த வீர மரபுடைய சேரன் செங்குட்டுவனின் வழியில்வந்த நம்மை டெல்லி ஏகாதிபத்திய வெறியர்கள்— அதிகார ஆணவம் மிக்க எதேச்சதிகாரிகள் இகழ்ந்து பேசி நம்மை அடக்கி அடிமைப்படுத்த எண்ணினால் இனி நாம் அவர்கள் சென்னைக்கு என்று வருவார்கள் என எதிர்பார்த்துக் கொண்டிருக்க மாட்டோம். அந்த எதேச்சதிகார வெறிபிடித்த இந்தி ஏகாதிபத்திய தருக்கர்களின் ஆணவத்தையும், அகம்பாவத்தையும் அடக்குவதற்கு டெல்லிக்கே நேரே சென்று மானத்தைக் காப்பாற்ற போராடி வருவோம் என்பதை ஆட்சியாளர்களுக்கு எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் கறுப்புக் கொடியை கைவிட்டு விட்டது. இனி அது இந்தியை எதிர்த்துப் போராட்டம் நடத்தாது அதற்குப் போராடும் சக்தி இல்லை என்று கேலிக் கனலை எழுப்பி நம்மை இழிவுபடுத்தி வருபவர்களைப் பற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை. இந்தி எத்தனைப் பட்டாளத்துடன், எப்பக்கம் வந்தாலும் அதை எதிர்த்து ஒழித்துக் கட்டுவதற்கு தி. மு. கழகம் என்றும் தயங்காது. தி. மு. கழகம் தனது போர்க் கொடியை இன்னும் தாழ்த்தவில்லை; அது உயரே பறந்து கொண்டே தான் இருக்கிறது என்று முன்னேற்றக் கழகத்தின் லட்சியம் நிறைவேறுகிறதோ அன்றுதான் அது தனது போருடையை மாற்றுமே தவிர அதுவரை போருடையுடன்தான் முன்னேற்றக் கழகம் திகழும். காலிகளையும், ரௌடிகளையும், இழிகுணம் படைத்தவர்களையும் வைத்துக் கொண்டு முன்னேற்றக் கழகத்தை அழித்துவிட யாரும் எண்ணினால் அதில் வெற்றி காண முடியாது. முன்னேற்றக் கழகம் என்றும் தன்லட்சிய பாதையை விட்டு ஒரு சிறிதும் அகலவே அகலாது.

நேற்று என்பது கடந்த ஒன்று; அழிந்த ஒன்று. நாளை என்பது உறுதியற்றது. இன்று என்பது இப்பொழுதே, இந்த தலைமுறையினரே அடையும்படியான ஒரு உயிரோவியத்தைக் கொண்டது. எதிர்காலச் சந்ததிகளின் நல்வாழ்விற்கான பிரச்சினையில் உறுதியாக, நிச்சயமாக போராட திராவிட முன்னேற்றக் கழகம் உறுதி கொண்டு விட்டது.

அஞ்சலட்டைகளிலும் அன்றுடப் புழக்கத்திலிருந்து வரும் காசுகளிலும் இந்தியைப்புகுத்தி விட்டார்கள். இந்தியை மற்ற மாநில மக்களின் மீது திணித்து விடவேண்டுமென்று வடவர்கள் இன்று தீவிர முயற்சியிலீடுபட்டு வருகிறார்கள். மைல்கற்களிலும் வானொலியிலும் இந்தியைப் புகுத்தி ஏகாதிபத்திய வெறியைக் கண்டிக்கும் வகையில் நமது மாநில சட்டமன்றத்தில், நமது கழக சட்டமன்ற உறுப்பினர்களும், டெல்லி பாராளுமன்றத்தில் நமதருமை நண்பர் சம்பத்தும், தருமலிங்கமும் கண்டித்து பேசிவந்தார்கள். நம்முடைய எதிர்ப்புக் குரலை மதித்து செவிசாய்க்காத வடபுலத்தார் மீண்டும் தங்களது பிடிவாதத்தைக் காட்டியே வருகிறார்கள்.

நம்முடைய மாநிலத்து அமைச்சர் பக்தவத்ஸலம் ஒருமுறை மைல் கற்களில் இந்தி புகுத்தப்படுவதை எதிர்த்து பேசி இருக்கிறார். அவர் தனது வடநாட்டுப் பயணத்தின் போது தான் அனுபவித்த இன்னல்களைப் பற்றி கூறி இருக்கிறார்.

நமதருமை நண்பர் சம்பத் டெல்லி பாராளு மன்றத்தில் "சென்னை அமைச்சர்களின் விருப்பத்திற்கு மாறாக இந்தியை சென்னை மாநிலத்தின் மீது திணிக்கிறீர்களா? அவர்கள் அதை எதிர்த்து இருக்கிறார்களா? என்று ஒரு முறை கேள்விகேட்கப்பட்டதுஅதற்கு பதிலளித்த பந்த் சென்னை அமைச்சர்கள் "இந்தியை எதிர்த்து எந்த அபிப்பிராயமும் கூறவில்லை" என்று கூறிவிட்டார்.

நம்முடைய மாநில அமைச்சர்கள் இங்கே நம்மிடம் பேசும்போது இந்தியை எதிர்ப்பது போன்று நடிப்பதும், அங்கே அவர்களிடம் பேசும்போது ஆதரவு தருவதாக சலாம் போடுவதுமான தாசர் புத்தி இருக்கின்றவர்களை நம்பி நாம் என்ன செய்ய முடியும்? பதவி நாற்காலி சாஸ்வதமாக இருக்கவேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக இந்த நாட்டையும், இந்த நாட்டு மொழியையும் காட்டிக் கொடுக்கும் ஈனர்களாக இன்று இந்த அமைச்சர்கள் இருக்கிறார்கள்.

நான் என் பேச்சை முடிக்கு முன் இந்த மாநில ஆட்சியாளருக்கு ஒரு எச்சரிக்கையும், பொதுச் செயலாளருக்கு ஒரு வேண்டுகோளும் விடுக்க ஆசைப்படுகிறேன்.

இன்று வெறியர்களும் ரௌடிகளும், காலிகளும் காங்கிரஸில் சோந்து கொண்டு நம்முடைய தோழர்களை சென்னையிலிருந்து மற்ற மாவட்டங்கள் வாரியாக தாக்க முனைந்துள்ளனர். இந்த கூட்டத்தில் நமது நாவலர் அவர்கள் இருப்பதாலேயே நாம் சில விஷயங்களை கூறலாமென்றும் அவர் மூலமாகவே இந்த சர்க்காருக்கு எச்சரிக்கையும் விடலாமென்றும் ஆசைப்படுகிறேன்.

இந்த கூட்டத்திற்கு வருவதற்கு முன்தான் ஒரு வேதனை தரும் செய்தியைக் கேள்விப்பட்டேன். குன்றத்தூர் சம்பந்தம் அவர்களை காங்கிரஸ் காலிகள் கையிலும் கால்களிலும் வெட்டி, அவர் மரணப்படுக்கையில் இருப்பதாக செய்தி கிடைத்தது. தோழர் சம்பந்தம் செங்கற்பட்டு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னாள் செயலாளர். குன்றத்தூர் ஊராட்சி மன்றத்தின் தலைவராக இருந்தவர். அப்படிப்பட்டவரை காலிகள் வெறிச் செயலில் ஈடுபட்டு அவரைத் தாக்கி இருக்கிறார்கள்.

கோயம்புத்தூர் ஆரோக்கியசாமியை பிணமாக்கி இருக்கிறார்கள். இதுபற்றி இன்று காலைதான் நான் நண்பர் சம்பத்துடன் பேசிக் கொண்டிருந்தேன், நண்பர் ஆரோக்கியசாமி நம்முடைய கழகக் கட்டிடத்தில் இந்தி எதிர்ப்பு விளம்பரங்களை ஒட்டிக் கொண்டிருந்தார். அப்போது அங்கே நான்கைந்து வெறியர்கள் வந்திருக்கிறார்கள், நண்பர் ஆரோக்கியசாமி தன்னை யாரோ பார்க்க வந்திருப்பதாக எண்ணி 'வாருங்கள் உள்ளே' என்று வரவேற்றார், "ஆமடா வந்தோம்" என்று கூறிக் கொண்டே உள்ளே சென்ற அந்த மிருகங்கள் ஆரோக்கியசாமியின் கையிலும், மணிக்கட்டிலும், கால்களிலும் வெட்டி அவரை பிணமாக்கினர்;

கும்பகோணத்தில் கொள்கை வீரன் இராமலிங்கம் பிணமானான்! இன்றைய காங்கிரஸ் கொள்ளைக் காரர்களுக்கும், ரௌடிகளுக்கும், காலிகளுக்கும் புகலிடமாக இருக்கிறது என்பதை பொதுமக்கள் புரிந்து கொண்டனர்.

மக்களால் கொலைஞன்என்று குற்றம் சாட்டப்பட்ட ஒரு அயோக்கியன் காங்கிரஸ் மேடையில் தரக்குறைவாகவும், இழிவான முறையிலும் நமதறிஞர் அண்ணா அவர்களையும், என்னையும் சம்பத் அவர்களையும் தாக்கிப் பேசியிருக்கிறான். நமது அண்ணா அவர்களை மிகவும் மட்டமான முறையில் இழிவுபடுத்தி யிருக்கிறான், இதை சகிக்க முடியாத இராமலிங்கம் "அன்று புகழ்ந்து பேசிய நீ இன்று இகழ்ந்து பேசக் காரணம் என்ன? மேடையில் தரக் குறைவாகப் பேசாதே!" என்று கூறி இருக்கிறான். அவனைக் காலிகள் பிடித்து அடித்து போலீஸாரிடம் ஒப்படைத்திருக்கிறார்கள். கூட்டம் நடந்த இடத்திலிருந்து ஒரு பர்லாங்கு தூரம் நல்ல நிலைமையில் நடந்து சென்ற இராமலிங்கம் கடைசியில் பிணமாக வெளியே வந்தான். நான்அங்கே சென்ற போது இராமலிங்கம் மரணமடையும் தருவாயில் "அண்ணா அண்ணா" என்று அலறி உயிர் விட்டதாகக் கூறினார்கள்.

நான் இந்த நேரத்தில் பொதுச் செயலாளர் முன்னிலை

(12ம் பக்கம் பார்க்க)

விழுகின்ற பிணங்கள் விழுந்து கொண்டே இருக்கட்டும்!

அதற்காக அஞ்சோம், திருப்பியும் தாக்க மாட்டோம்!

அந்த அநாகரீகச் செயல் காங்கிரஸ்காரர்களுக்கே சொந்தமாக இருக்கட்டும்!

(9ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு கிளம்பினன்! அவன் சொன்னவுடனேயே டெல்லி செங்கோட்டையில் பறந்து கொண்டிருந்த யூனியன் ஜாக் கீழே விழுந்து விட்டதா? சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் காங்கிரஸ் கொடி பறந்ததா? அந்தப் போராட்டத்தில் காங்கிரஸ்கட்சிக்கு வெற்றி கிடைக்கவில்லை! தோல்விதான் கிடைத்தது!

காங்கிரஸ் கொடி டெல்லி செங்கோட்டையில் ஏறவில்லை! சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் பறக்கவில்லை! திருப்பூர் குமரன் செத்தான்! ஆண்டுகள் பலகடந்தன! பிறகு ஒரு பத்து, பதினைந்து ஆண்டுகள் கழித்து அவனது எண்ணம் நிறைவேறிற்று!

சீமைத் துணியை கொளுத்தினீர்கள்! சீமைத் துணி இந்த நாட்டிற்கு வரவே கூடாது, இந்த நாட்டு மக்கள் அதைக் கட்டவே கூடாது என்று போராட்டம் நடத்தினீர்கள்! அந்தப் போராட்டத்தில் உங்களுக்கு வெற்றிகிடைத்ததா? சீமைத் துணியின் இறக்குமதி நிறுத்தப்பட்டதா? இன்றும் சீமைத் துணிகள் இங்கு ஏராளமாக இருக்கின்றதே!

உப்பு சத்தியாக்கிரகம் நடந்தது! அதிலாவது வெற்றி பெற்றீர்களா?

1942-ல் ஆகஸ்டு புரட்சியை நடத்தினீர்கள்! வெள்ளைக்காரன் அடியோடு கூடாது என்று முழங்கினீர்கள்! "வெள்ளைக்காரனே வெளியேறு" என்று தீர்மானமும் போட்டீர்கள்!

இரண்டாவது உலகப் போர் நடைபெற்றுக் கொண்டிருக்கிற நெருக்கடியான நேரத்தில் இந்த புரட்சியை நடத்தினீர்கள்! மிக்க ராஜதந்திரத்தோடு தான் நடத்தினீர்கள்! அந்த ராஜதந்திரம் தேவைதான்! அரசியல்வாதிகளுக்கு அத்தகைய ராஜ தந்திரங்கள் கட்டாயம் இருக்கத்தான் வேண்டும்! ஆனாலும் நீங்கள் அதில் உடனடியாக வெற்றியைக் கண்டீர்களா?

1942-ல் நடைபெற்ற புரட்சியை வெள்ளைக்காரன் பலமான அடக்குமுறையைக் கையாண்டு உங்களை ஒடுக்கினன்! காங்கிரஸ் கட்சி ஆபீஸ்களுக்கெல்லாம் சீல் வைத்தான்! பெரும் பெரும் தலைவர்களையெல்லாம் கைது செய்தான்! ஆகாகான் அரண்மனையில் காந்தியாரை சிறை பிடித்து வைத்தான்!

1942-ல் பெரும் புரட்சி நடந்தது! 1948-ல் காங்கிரஸ் பேச்சு மூச்சே இல்லாமல் கிடந்தது! அவ்வளவு பெரிய காங்கிரஸ் கட்சியையே அடக்கினன் என்றால், ஒடுக்கினன் என்றால், உங்களால் எங்களையா அடக்க முடியாது?

தந்திக் கம்பிகளை அறுத்தீர்கள், தண்டவாளங்களை பெயர்த்தீர்கள்! ராஜமன்னார்குடியில் சர்க்கார் அலுவலங்களுக்கு தீமூட்டி பெருங் கலகத்தை விளைவித்தீர்கள்! ஆனால் 1943-ல் "ஜே" போட ஒரு ஆள் இல்லை! கொடி தூக்க ஒரு ஆளில்லை! வெள்ளைக்காரன் உங்களை அடக்கி,ஒடுக்கி உட்கார வைத்து விட்டான்! பிறகு சில ஆண்டுகள் கடந்தன!

ஆட்களைத்தான் அடக்க முடிந்ததே தவிர, அந்த ஆட்களுடைய உணர்ச்சியை அடக்க முடியவில்லை! எழுச்சியை அடக்க முடியவில்லை! ஆட்களைத்தான் அடக்க முடியும், உணர்ச்சியை அடக்கமுடியாது என்பதை அவனும் கொஞ்சம் கொஞ்சமாக உணரத் தலைப்பட்டான்!

பிறகு 1944—1945 முடிந்தது! அலகாபாத்திலிருந்த காந்தியார் விடுதலை பெற்றார்! சீல் வைத்து மூடப்பட்டிருந்த காங்கிரஸ் கட்சி அலுவலங்களெல்லாம் திறக்கப்பட்டன! தடை நீங்கிற்று! பிறகு வழக்கம் போல் காங்கிரஸ் வீராதி வீரர்களெல்லாம் கர்ஜிக்க ஆரம்பித்தார்கள்! அடக்குமுறை பயனற்றுப் போயிற்று!

வெள்ளைக்காரன் உன்னையே அடக்கினன்! அவன் அடக்குமுறைகளைக்கண்டு நீயே ஒதுங்கி போனாய்! இதை நீ ஞாபகத்தில் வைத்துக்கொள்!

நீ ஒன்றும் துள்ளிக் குதித்தவனல்ல! அடங்கினாய்! வெள்ளைக்காரனுடைய அடக்குமுறைகளைக் கண்டு திகிலும் திகைப்பும் கொண்டாய்! இதை தயவு செய்து நீ ஞாபகத்தில் வைத்துக்கொள்! அவனே உன்னை அடக்கினன் என்றால் எங்களை நீ அடக்க எம்மாத்திரம்?

அவன் விட்டு விட்டு போன துப்பாக்கிகள் அப்படியே இருக்கின்றன!

அவன் வைத்து விட்டு போன சட்டங்கள் அப்படியே இருக்கின்றன!

1936 ல் இருந்த போலீஸ்காரர்களைவிட இப்போது 2 மடங்கு அதிகம்! அப்போதிருந்த குண்டாந்தடிகளை விட இப்போதிருக்கும் குண்டாந்தடிகளும் இரண்டு மூன்று பங்கு அதிகம்.

அப்போதிருந்த ஸ்பெஷல் போலீசைவிட இப்போதிருக்கும் ஸ்பெஷல் போலீஸ் படையும் அதிகம்!

36 கோடி மக்களை ஆட்டிப் படைக்கும் அதிகாரமும் உன் கையில் இருக்கிறது!

உன்னையே அவன் அடக்கினன் என்றால் அவன் விட்டுப்போன ஆயுதங்களால் எங்களையா அடக்க முடியாது? அடக்கலாம்! அடக்கமுடியும்! ஆனால் ஆட்களைத்தான் அடக்க முடியும்! உணர்ச்சிகளை நீ எப்போதுமே அடக்க முடியாது!

நாமும்50க்கு50 (fifty-fifty) என்ற நிலை வருவோமானல் அடக்கு முறைகளெல்லாம் தூள் தூளாகும்! தவிடு பொடியாகும் என்பதை உணர வேண்டும்!

காங்கிரஸ் இப்போது 100க்கு 75 இருக்கிறது!

நாமோ 100 க்கு 25ல் இருக்கிறோம்!

நாம் இருபத்து ஐந்திலிருந்து இருபததாறுக்குச் சென்றால் காங்கிரஸ் 74 ஆகும்! அவர்கள் 75 லிருந்து 74 க்கு இறங்கினல் நாம் 26 ஆக இருப்போம்! அவர்கள் 65க்கு வந்தால், நாம் முப்பத்தி ஐந்தாக வருவோம்! அவர்கள் ஐம்பதானல் நாமும் ஐம்பதாவோம்! அப்போத சட்டசபையில் 50—50 ஆக (Fifty-Fifty) இருப்போம்! பாதி,பாதியாக இருப்போம்! நாம் 60க்கு வந்தால் அவர்கள் நாற்பதுக்கு வருவார்கள்! அப்போது காமராஜரின் செல்வாக்கு குறையும், நேருவும் கீழே இறங்கி வருவார்! இது ஒன்றும் சிரமமான காரியமல்ல! இன்றே, நாளையோ, இன்னும் ஒரு வருடத்திலோ, மூன்றுவருடத்திலோ, நான்கு வருடங்களிலோ அது வந்துதானகும்! அது நாம் செய்கிற வேலையைப் பொறுத்து இருக்கிறது

நாம் எதற்கும் அஞ்சாமல் பணிபுரிவோமானல் இது நமக்கெல்லாம் மிகச் சாதாரனமானதாகும்! முதலில் அவர்கள் ஆளைத்தான் அடக்க முடியும்! உணர்ச்சியை, எழுச்சியை, கொந்தளிப்பை ஒருநாளும் அடக்க முடியாது!

1921ல் நடத்திய சட்டமறுப்பு இயக்கம். உப்பு சத்தியாக்கிரகம், சொடிப் போராட்டம், அதற்குப் பின்னலே நடத்திய ஆகஸ்டு புரட்சி எல்லாம் சேர்ந்து 1947ல் வெள்ளைக்காரனை விரட்டியடித்தது போல்—நாம் நடத்திய இந்தி எதிர்ப்புப் போராட்டங்கள், கல்லக்குடி போராட்டம், குலக் கல்வித் திட்ட எதிர்ப்புப் போராட்டம்,நேருவுக்குக் கறுப்

(அடுத்த பக்கம் பார்க்க)

தாரணிக்கோர் தங்கம் தமிழ் வளர்க்கும் சங்கம்!

★★★

அண்ணு ஒரு மூன்றெழுத்து மோகனச் சொல்! அண்ணுவும் மூன்றெழுத்து; அறிவும் மூன்றெழுத்து; இன்பம் பயக்கும் பணம் மூன்றெழுத்து; அது கொடுக்கும் சுகம் மூன்றெழுத்து; அன்பு மூன்றெழுத்து, அதற்குப் பின் வரும் களம் மூன்றெழுத்து. அங்கு கிடைக்கும் வெற்றி மூன்றெழுத்து; எங்கள் அண்ணுவும் மூன்றெழுத்து!

கலைஞர் மு. கருணாநிதி.

Registered as a Newspaper in CEYLON

இலங்கையில் 20 சதம்

Regd.No.M. 7074 **MALAIMANI** விலை 16 காசு Phone 83285

நாடகத் தமிழ் வளர்த்த...

(8ம் பக்கத் தொடர்ச்சி)

கலையாக்கத்தில் மற்றவர்களைக் காட்டிலும் அதிகமாக இணைந்து நின்று பொறுப்பேற்பவர் நடிப்பிசைப் புலவர்.

திராவிடர் கழகத்தினின்றும் நாம் பிரிந்து திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கிய போது கழகம் வளரக் கை கொடுத்துதவியது அண்ணா அவர்களின் நாடகங்கள் தாம் என்பது பலர் மறந்துவிட்ட ஒரு உண்மை.

தி. மு. க. பிரசாரத்திற்கும், வளர்ச்சிக்கும், நிதி சேர்ப்பதற்கும் அண்ணா அவர்கள் நாடகக் கலையை நல்லதொரு சாதனமாக்கினார்கள். கழகம் வளர்ந்தது; கழக நடிகர்கள் வளர்ந்தனர்; கழகக் கருத்துக்கள் பட்டி தொட்டிகள் மூலைமுடுக்குகள் தோறும் பரவின! மேலும் மேலும் பரவிக் கொண்டு வருகின்றன!

நம் கழகத்தை எதிர்ப்போரும் "நாடகமாடிகளால் நாடாள முடியுமா?" என்று கேட்டோரும் நாடகக் கலையிடம் இப்போது தஞ்சம் புகுந்துள்ளனர். திட்டங்களைப் பிரசாரம் செய்யவும், நம்மைத் திட்டவும் நாடகங்கள் நடத்துகின்றனர்! மக்களின் எண்ணங்களைப் பிரதிபலிக்கும் கருத்துவளம்–விடுதலை வேட்கையுணர்ச்சியின்மையால் அவைகள் வீழ்ச்சியடைகின்றன கலை கலைக்காகவே இருக்க வேண்டும். நாடகத்தில் பிரசாரம் கூடாது" என்று கதறியவர்களின் தோல்வியையும், "நற்கொள்கை நாடகத்தே இடம் பெறவேண்டும்" என்ற அண்ணா அவர்களின் கருத்தின் வெற்றியையும் இவை காட்டுகின்றன!

முத்தமிழில் ஒன்றான இயற்றமிழுக்கு அண்ணா அவர்கள் ஆற்றியுள்ள பணிமிகப்பெரிது. தமிழ் மொழிக்கே புது நடையும், புதுப் பொலிவும் சேர்ப்பது; தமிழறிஞர்களைக் கூர்ந்து நிற்பது என்பன மறுமலர்ச்சித் தமிழ் வரலாற்றிலே தனியிடம் பெறத் தக்கவை.

ஒதுக்கப்பட்டுக் கிடந்த நாடகக் கலைக்கு, சுயமரியாதை, பகுத்தறிவு, சீர்திருத்தம், சமுதாய விடுதலை, நாட்டுரிமை, மொழி வேட்கைபோன்ற புதிய பொன்னணிகள் பூட்டி மேடையேற்றி நடமாட விட்டவர்; நாடகத் தமிழுக்கு மற்றெவராலும் ஈட்ட முடியாத நன்மதிப்பை ஈட்டித் தந்தவர் நமதருமை அண்ணா; நாடகத்தமிழ் காக்கும் நல்லறிஞர்; கருத்து நாடக மறுமலர்ச்சியின் ஒரு தனித் தந்தை! அண்ணா வாழ்க! அவர்தம் கருத்து வெல்க!

(கருணாநிதி பேச்சு)

(10ம் பக்கத் தொடர்ச்சி)

யில் ஆட்சியாளருக்கு எச்சரிக்கையோடு கேட்க ஆசைப்படுகிறேன்! "இந்த பிணங்கள் விழத்தான் வேண்டுமா? "அதே நேரத்தில் பொதுச் செயலாளரையும் கேட்டுக் கொள்கிறேன் "இந்த பிணங்கள் விழுந்துதான் ஆகவேண்டுமா?" பல பிணங்களை நாம் கொடுத்திருக்கிறோம். இன்னும் நாங்கள் பிணங்களை தரவேண்டுமா? தரவேண்டுமா? என்று கேட்க விரும்புகிறேன். பாண்டியனை பிணமாக்கித் தந்தோம்! நெல்லிக்குப்பம் மஜித்தை பிணமாக்கித் தந்தோம்! உடையார்பாளையம் வேலாயுதத்தைப் பிணமாக்கித் தந்தோம்! தூத்துக்குடி சாமியை பிணமாக்கித் தந்தோம்! இப்போது குடந்தை இராமலிங்கத்தையும், கோவை ஆரோக்கியசாமியையும் பிணமாக்கித் தந்திருக்கிறோம். இன்னும் எத்தனைப் பிணங்கள் தான் விழவேண்டுமென்று ஆட்சியாளர்கள் விரும்புகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்! இந்த நிலை நீடிக்கத்தான் வேண்டுமா? இதற்கு எல்லை இல்லையா? இதை நான் நமது நாவலர் அவர்களின் முன் கூறி விடைபெறுகிறேன்!

(கலைஞர் பேசிய உணர்ச்சிமிக்க சொற்பொழிவைக் கேட்ட பொதுமக்கள் கண்ணீர்விட்டு சில நிமிடங்கள் கலங்கி அழுதனர்.)

காசுகளில் இருக்கிற இந்தி போகும், ஸ்டாம்புகளில் இருக்கிற இந்தி ஒழியும்!

இதெல்லாம் ஒரே நாளில் நடக்கும், ஒரே நேரத்தில் நடக்கும்!

பரந்து விரிந்துக் கிடக்கின்ற நாட்டைக் காட்டி, அகன்று விரிந்துக் கிடக்கின்ற வடஎல்லையைக் காட்டி, சோலைகளைக் காட்டி, காடுகளைக் காட்டி, காடுகளிலே உள்ள அகிலைக் காட்டி, தேக்கைக் காட்டி, மணக்கும் சந்தனத்தைக்காட்டி, நாட்டைச் சுற்றி மூன்று பக்கங்களிலும் உள்ள கடலைக் காட்டி கடலிலே உள்ள முத்துக்களைக் காட்டி, அந்த முத்துக்களை மூச்சடக்கி எடுக்கும் வீரர்களைக் காட்டி—அங்குள்ள மீன்களைக் காட்டி, மீன்களிலே இருக்கும் கொழுப்பு சக்திகளைக் காட்டி, அந்த மீன்களைப் பிடிக்கும் மீனவர்களைக் காட்டி, கப்பல்களிலே ஏற்றுமதி செய்யப்படும் மிளகைக் காட்டி, மண்ணிலே புதைந்து கிடக்கும் தங்கத்தைக் காட்டி, நமக்குக் கிடைத்துள்ள எல்லா வளங்களையும் காட்டி, அந்த வளங்களாலும், எந்த இழிச் செயல்களாலும் அழிக்க முடியாது!

கலைஞர் கருணாநிதி இங்கே மிக உருக்கமாகப் பேசினார்! காங்கிரஸ் சௌடித்தனங்களால் நடைபெற்றுக் கொண்டு வரும் கோர நிகழ்ச்சிகளைப் பற்றி மனமுருக எடுத்துச் சொன்னார்! குடந்தை ராமலிங்கம் பிணமானார், கோவை ஆரோக்கியசாமி பிணமானார், குன்றத்தூர் சம்பந்தம் வெட்டப்பட்டார்! இந்த சம்பவங்களை எடுத்துக் காட்டி—இன்னும் இந்தப் பிணங்கள் விழத்தான் வேண்டுமா" என்று என்னைப் பார்த்துக் கேட்டார்! நான் அப்படிப்பட்டவனல்ல! பிணங்கள் விழத்தான் வேண்டுமென்று சொல்லுபவனுமல்ல! ஆனால் அந்த இழி செயலில் நாமும் இறங்குவதா? அந்த அநாகரீக முறையை நாமும் கடைபிடிப்பதா? அது காங்கிரஸ்காரர்களுக்கு மட்டுமே சொந்தமாக இருக்கட்டும்!

குடந்தை இராமலிங்கத்தை நாம் அறியோம், அவரை நாம் பார்த்ததுகூட இல்லை! ஆனால் அவர் செய்த தியாகம் நமக்கெல்லாம் எழுச்சியை ஊட்டுகிறது. உணர்ச்சியை ஊட்டுகிறது. ஊக்கத்தை ஊட்டுகிறது, ஆக்கத்தை அளிக்கிறது! இன்னும் எத்தனையோ பிணங்கள் விழக் கூடும்! நாம் கூட பிணமாகலாம்! பிணங்கள் விழ விழ நமது விடுதலைப் பயணத்தைத் திரிதப்படுத்துமேதவிர தடுத்து நிறுத்தாது! எனவே நாமும் அந்த இழிச்செயலில் இறங்க வேண்டாம்!

சிறுத்தையென பாயுங்கள்! சிங்கமென சீறி எழுங்கள்!

"இந்தி வந்து புகுந்தது நாட்டினிலே—இன்னும் என்ன செய்கின்றீர் வீட்டினிலே!"

பங்கம் விளைந்திடில் தாய்மொழிக்கே உடற்பச்சை ரத்தம் பரிமாறிடுவோம் என்று சபதம் கொண்டு, இந்தியை விரட்டி யடிக்கவும், திராவிடத்தை விடுவிக்கவும் உங்கள் இலட்சியப்பயணத்தைத் தொடர்ந்து நடத்துங்கள் என்று கூறி உங்களிடமிருந்து விடை பெறுகிறேன்!

அண்ணாதான் வழிகாட்டவேண்டும்

★★★

"காந்தியாரால் கஷ்டப்பட்டு வாங்கப்பட்ட சுதந்திரம் அழிந்து விடுமோ என்று அஞ்சவேண்டியிருக்கிறது. நமது சுதந்திரத்தை அழிக்கும் சக்தி அமெரிக்காவின் பண பலத்திலும், ரஷ்யாவின் படை பலத்திலும், இங்கிலாந்தின் எதிர்ப்பிலும் இல்லை. இந்த நாட்டிலே மலிந்து கிடக்கும் ஜாதி மத வேறுபாட்டில்தான் இருக்கிறது. ஆகவே ஜாதியை ஒழிக்க முயலவேண்டும். அதற்கு அண்ணாதான் வழிகாட்டவேண்டும்!"

டி. செங்கல்வராயன்.

நாவலர் முழக்கம்

(முன் பக்கத் தொடர்ச்சி)

புக் கொடி காட்டிய போராட்டம்—அதன் பிறகு இப்போது நடத்திய போராட்டங்கள், இனிமேல் நாம் நடத்த இருக்கின்ற போராட்டங்கள் எல்லாம் சேர்ந்து நமக்கு விடுதலையை வழங்கத்தான் போகின்றன! அது அறுபத்தி ஒன்றோ அறுபத்தி இரண்டோ, அல்லது அறுபத்தி மூன்று, அறுபத்து நான்கிலோ நடக்கத்தான் போகிறது!

அப்போது இந்தி ஆதிக்கம் போகும், ஆகாஷ்வாணி போகும், வானொலி வரும்! டால்மியாபுரம் போகும் கல்லக்குடி வரும்! அப்போது நாடுகளுக்குரிய சொந்தக்காரர்களையும் காட்டி, அந்த சொந்தக்காரர்கள் திராவிடர்கள் என்பதைக் காட்டி, "நாம் திராவிட நாடு திராவிடருக்கே" என்றும் முழங்கி வருகிறோம்!

இங்கே எல்லா வளங்களும் இருக்கின்றன! ஆனால் ஆட்கள்தான் சரியாக இல்லை! மக்கள்தான் சரியாக இல்லை! மக்கள் எழுச்சியும், உணர்ச்சியும் பெற்று வீறு கொண்டெழுவார்களானால் நிச்சயமாக திராவிடம் வெகு விரைவில் விடுதலை பெற்று விடும்! எழுச்சி பெற்று விடும்! எழுச்சி பெற்றுவிட்ட மக்களை எந்த அடக்குமுறை

★

ஆசிரியரும், வெளியிடுபவரும், அச்சிடுபவரும் பி.எஸ். இளங்கோ கல்விப் பிரகாசம் பிரஸ், 404 திருவல்லிக்கேணிஹைரோடு, சென்னை-5 அலுவலகம்: 1-35, வாணியர் தெரு. சென்னை-14.